விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22· வள்ளுவர் ஆண்டு 2052 தை 24 சனிக்கிழமை (06.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 049

### பருத்தித்துறைக்குள் நுழைய

## அஹிம்சை பேரணிக்கு நீதிமன்றம் தடை

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடங்கி பொலி கண்டி வரையான தமிழ் மக்களின் நீதிக்கான அஹிம்சை வழி போராட்டம் ஆரம்ப மாகியுள்ள நிலையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் நேற்று முதல் நான்கு நாட்களுக்கு ஆர்ப்பாட்டங்கள், 19

### தமிழரின் நீதிக்கான பேரணிக்கு

## யாழ்.,மல்லாகம், சாவகச்சேரி நீதிமன்றங்கள் நேற்று அனுமதி

### பொலிஸாரின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான தமிழரின் நீதிக்கான அஹிம்சை வழிப் பேரணிக்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் மல்லாகம் நீதிமன்றங்களில் பொலிஸார் தாக்கல் செய்த மனுக்கள், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

சுகாதார விதி முறைகளை பின்பற்றி, 19

### பல்லாயிரக்கணக்கானோரின் ஆதரவுடன்

# நீதிக்கான எழுச்சிப் பேரணி வவுனியாவை வந்தடைந்தது

### இன்று மன்னார் நோக்கி பயணம்

*(வவுனியா)*

**பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரை வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் நீதிக்கான கவனயீர்ப்புப் பேரணியின் 3ஆம் நாளான நேற்று வவுனியாவில் நிறைவு பெற்றுள்ளது.**

நேற்றுக் காலை 9.00 மணிக்கு திருகோணமலையில் ஆரம்பித்த பேரணி தென்னமரவாடி கொக்கிளாய் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தினை அடைந்திருந்தது. அங்கிருந்து முள்ளிவாய்க்கால் ஊடாக புதுக்குடியிருப்பு நோக்கி சென்று 19



### வடக்கில் 8 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல் கலைக்கழக மரு 19

### தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

#### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தாக்குதலுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பத் தலைவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி 19

### கொரோனா 4 பேர் மரணம்

#### +729 தொற்று

(கொழும்பு)

கொரோனா 19

### 27 அத்தியாவசிய பொருட்களின் விலை

#### தற்காலிகமாக குறைப்பு

(கொழும்பு)

27 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 3 மாத காலங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப் படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப் பின்போதே அவர் 19

### வீதிகளில் ஆணிகள் வீசி

## நீதிக்கான பேரணியை குழப்ப விஷமிகள் முயற்சி

### வாகனங்கள் மீதும் கல் வீச்சு தாக்குதல்

(முல்லைத்தீவு)

பொத்துவில் முதல் பொலி கண்டி வரை நடைபெறும் பேரணியின் மூன்றாவது நாளான நேற்று திருகோணமலையில் இருந்து பேரணி பய 19

## எழுச்சிப் பேரணிக்கு ஆதரவளித்தவர்களின்

### மோ.சைக்கிள் இலக்கங்களை பதிவு செய்த பொலிஸார்

(முல்லைத்தீவு)

நெடுங்கேணி பிரதேசத்தில் போராட்டத்திற்கு ஆதரவளிப்பவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கங்களை பொலிஸார் பதிவு செய்தனர்.

பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரை எழுச்சிப் பேரணி நகர்ந்தபோது தமது பகுதியால் நகரும் 19

### முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில்

#### சுடர் ஏற்றி அஞ்சலி

பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான மாபெரும் பேரணி முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை அடைந்த நிலையில் அங்கு இறுதிப் போரில் உயிரிழந்த மக்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-3)

### அஹிம்சை பேரணியில் பங்கேற்ற

## சிவாஜிலிங்கத்தின் வாகன கண்ணாடிகள் உடைப்பு

(முல்லைத்தீவு)

பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான போராட்டத்தில் பங்கேற்ற முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் வாகனம் மீது திருகோணமலை மடத்தடி பகுதியில் சிலர் தாக்குதல் மேற்கொண்டு வாகனத்தின் பக்க கண்ணாடிகளை சேதமாக்கியுள்ளனர்.

இது தொடர்பில் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், இத்தகைய தாக்குதலுக்கு நாங்கள் ஒரு 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பற்றைக்குள் நடுவே திடீர் சிவலிங்கம்

## குப்பிழானில் பரபரப்பு

(குப்பிழான்)

யாழ். குப்பிழான் வடக்கில் தனியாருக்குச் சொந்தமான காணியொன்றுக்குள் பற்றைகளுக்கு நடுவே சிவலிங்கம் மற்றும் நந்தி, பலிபீடங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள தனியார்காணியொன்றுக்குள்ளேயே குறித்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணியின் ஒரு பகுதி பெரும் பற்றைகள் சூழ்ந்து காணப்படும் நிலையில் பற்றைகளின் சிறியதொரு பகுதி துப்பரவாக்கப்பட்டு அதன் நடுவே மேற்படி சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது. அதன் முன்பாக நந்தி மற்றும் பலிபீடம் என்பன பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை (05) காலை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் அவதானித்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் ஊர் முழுவதும் தகவல் பரவியுள்ளது. இதனையடுத்து அப்பகுதிக்குப் பொதுமக்கள் பலரும் படையெடுத்து வருகின்றனர். அத்துடன் மிகுந்த ஆர்வத்துடனும், ஆச்சரியத்துடனும் பார்வையிட்டுத் தரிசித்தும் சென்றனர்.

இதேவேளை, குப்பிழானில் விநாயகர், அம்பாள், வைரவர் உள்ளிட்ட பல தெய்வங்களுக்கும் தனியான ஆலயங்கள் காணப்படுகின்றபோதும் சிவனுக்கென இதுவரை தனியான ஆலயங்கள் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-03.18)


**மணமகள் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர் (அரசு) பாவ 31, திருவோண நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

(5453)

070 640 5951

E.Mail- engchelvm@gmail.com


# இலங்கை தொடர்பில் சுயாதீன சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறை வேண்டும்

## ஐ.நா நிபுணர் குழுக்கள் கூட்டாக பரிந்துரை

(ஜெனீவா)

இலங்கை தொடர்பில் ஐ.நாவின் தலையீட்டுடன், ஒரு பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீனமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவ வேண்டும் என ஐ.நா. நிபுணர் குழுக்கள் கூட்டாகப் பரிந்துரைத்துள்ளன.

அத்துடன், சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறை உட்பட இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான அனைத்து வழிமுறைகளையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் உறுப்பு நாடுகள் ஆராய வேண்டும் எனவும் ஐக்கியநாடுகள் நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2015 முதல் 2019 வரை இலங்கைக்கு மேற்கொண்ட 10 உத்தியோகபூர்வ விஜயங்களின்போது அவதானித்த விடயங்களைக் கொண்டு ஐ.நா. சுயாதீன நிபுணர் குழுவினர் கூட்டாக இந்தப் பரிந்துரைகளை நேற்று முன்வைத்துள்ளனர்.

கடந்த கால குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும். அத்துடன் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்றும் இலங்கையை ஐ.நா. மனித உரிமை வல்லுநர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கடந்த கால குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான கண்காணிப்பை அதிகரிப்பதற்கும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் மனித உரிமைகள் பேரவையின் முயற்சிகளைத் தொடருமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர்

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயங்களில் இலங்கை தோல்வி கண்டுள்ளது.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினரை அச்சுறுத்தும் வகையில் அரசாங்கத்தின் பெரும்பான்மைச் சொல்லாட்சி அமைந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் சிவில் செயற்பாடுகளை இராணுவமயமாக்கும்போக்கு அதிகரித்துள்ளது. அத்துடன், சிவில் சமூகப் பணிகளில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை ஆபத்தானது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ம-03)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532







# இராணுவத்திற்கு எதிரான வழக்குகளை தள்ளுபடி செய்க

## ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு எதிரான வழக்குகளை தள்ளுபடி செய்யுமாறு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் குற்ற விசாரணைப்பிரிவினால்கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட இராணுவத்தினருக்கு எதிரான வழக்குகளை தள்ளுபடி செய்யுமாறு பரிந்துரை செய்துள்ளது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு இந்த பரிந்துரையை செய்துள்ளது.

மேலும் இந்த இராணுவத் தினரை குற்றமற்றவர்கள் என நீதிமன்றம் அறிவித்து விடுதலை செய்ய வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழு கோரியுள்ளதாக சிங்கள பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம-03)

# விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற சாரதி

## இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பி ஓடிய டிப்பர் சாரதி இளைஞர்களால் மடக்கி பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மாலையில் மக்கள் நடமாட்டம் அதிகமான வீதியில் அலட்சியமாக டிப்பர் வாகனத்தை ஓட்டிய குறித்த நபர், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மீது மோதியுள்ளார். சம்பவத்தையடுத்து டிப்பர் வாகன பின் சக்கரத்திற்குள் தவறி விழுந்த இளைஞனின் கை சிதைவடைந்துள்ளது.

இந்நிலையில் டிப்பர் வாகன சாரதி அங்கிருந்து தப்பி ஓடியிருக்கின்றார். இதனையடுத்து துரத்தி சென்ற இளைஞர்கள் மருதனார்மடம் பகுதியில் வைத்து சாரதியை மடக்கிப் பிடித்ததுடன், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(ம-03)

# ஈழத்தமிழர் நீதிக்கான நடைபயணத்திற்கு கனேடிய பாராளுமன்றத்தில் ஒலித்த ஆதரவுக்குரல்



**(ரொரண்டோ)**

**பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை ஈழத்தில் தமிழ் மக்கள் முன்னெடுக்கும் "நீதிக்காக நடப்போருக்கு" ஆதரவு தெரிவித்து கனேடிய பாராளுமன்றில் அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி உரையாற்றினார்.**

ஹரி மேலும் உரையாற்றுகையில், சபாநாயகர் அவர்களே,

இலங்கை அதன் 73 ஆவது சுதந்திர நாளைக் கடைப்பிடிக்கும் வேளையில், "பொத்துவிலில் இருந்து பொலிண்டி வரை" நீதிக்காக நடப்போருக்கு ஆதரவைத் தெரிவிப்பதற்காக நான் உரையாற்றுகிறேன்.

உயிர் தப்பியுள்ளோரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் மேற்கொள்ளும் இந்தப் பயணத்தில் குடிசார் சமூக செயற்பாட்டாளர்களும் அரசியல் தலைவர்களும் இணைந்து கொண்டுள்ளார்கள்.

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராகப் புரிந்த போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கான பொறுப்புக்கூறலே அவர்களது நோக்கம்.

சபாநாயகர் அவர்களே, இலங்கைத்தீவு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து குற்றம் புரிவோர் தண்டிக்கப்படாத நிலை காணப்படுவதுடன், சட்டத்தின் ஆட்சியும் செயலிழந்துள்ளது.

இலங்கை அரசு கடந்த சில மாதங்களில் மட்டும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடித்தழித்து, போர்க் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கி, முஸ்லிம் சிறுபான்மையினரின் உடல்களைப் பலவந்தமாகத் தகனம் செய்ததுடன், குடிசார் அமைப்புக்கள் பலவற்றை இராணுவம் பொறுப்பேற்றும் உள்ளது.

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டுமெனக் கடந்த வாரம் முடிவு செய்த மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர், இலங்கை தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் இன்றிச் செயற்பட அனுமதிக்கப்பட்டால் முன்னரைப் போன்ற அட்டூழியங்கள் மீண்டும் இடம்பெறுமென எச்சரித்துள்ளார்.

ஆகையால், இலங்கைத் தீவில் தமிழர்கள் சமாதானம், நீதி, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றுடன் வாழ்வதை உறுதி செய்வதற்குச் சர்வதேச சமூகம் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்தார். (நி-4)

# தமிழால் ஒன்றிணைந்த எழுச்சிப் பேரணி 3 ஆவது நாளாக வீறுநடை போடுகிறது










(திருகோணமலை)

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு எதிரான அரசின் அடக்கு முறைகளை எதிர்த்தும் கண்டித்தும் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள் ஏற்பாடு செய்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி நேற்று 03 ஆ[illegible] நாளாக திருகோணமலை சிவன் கோவிலடியில் இருந்து ஆரம்பமானது. நேற்றுக் காலை 8.00 மணிக்கு திருகோணமலை சிவன் கோயிலில் விசேட பூசை இடம்பெற்று இப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட குடியேற்றம், தொல் பொருள் என்ற போர்வையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பூர்வீகம் அபகரிப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மற்றும் ஜனாஸா எரிப்பு என்பவற்றை கண்டித்தே இந்தக் கண்டனப் பேரணி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## இ.போ.ச. ஊழியர்களின் விடுமுறை இரத்து

(கொழும்பு)

உடன் அமுலாகும் வகையில் இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்களின் விடுமுறை மறு அறிவித்தல் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க இதனை தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை தனியார் பேருந்து நடத்துநர்கள் வேலை நிறுத்தம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## களனி பல்கலையில் ஐவருக்கு தொற்று

(களனி)

களனி பல்கலைக்கழகத்தில் ஐந்து மாணவர்களுக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

கல்வி நடவடிக்கைகளுக்காக எழுமாறாக விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே குறித்த மாணவ, மாணவிகளுக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-4)

# ஜோ ரூட் ஜோரான சதம்

## ● இங்கிலாந்து அமர்க்கள ஆரம்பம்
## ● இந்திய பந்துவீச்சாளர்கள் தடுமாற்றம்

ஜோ ரூட்டின் கலக்கலான துடுப்பாட்டத்தால் சென்னை டெஸ்டில் முதல் நாளிலேயே இங்கிலாந்து வலுப்பெற்றுள்ளது. நூறாவது டெஸ்டில் சதம் அடித்து மிரட்டினார். இந்திய பந்துவீச்சு ஏமாற்றமாக அமைந்தது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் ஒரு பகுதியாக நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று தொடங்கியது. முதல் இரு நாட்களில் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்கும் என்பதால், நாணயச்சுழற்சியில் வென்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட், எதிர்பார்த்தபடியே துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இந்திய அணி ஐந்து பவுலர்களுடன் களமிறங்கியது. அஷ்வின், வாஷிங்டன் சுந்தர், பும்ரா, இஷாந்த் சர்மாவுடன், ஷாபாஸ் நதீம் மீண்டும் டெஸ்ட் அணிக்கு திரும்பினார். சிப்லே அபாரம்

இங்கிலாந்து அணிக்கு பேர்ன்ஸ், சிப்லே ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அஷ்வின், நதீம் வீசிய முதல் ஓவர்களில் சிப்லே பவுண்டரி அடித்தார். முதல் விக்கெட்டுக்கு 63 ஓட்டங்கள் சேர்த்தபோது, அஷ்வின் பந்தை 'சுவீப் ஷாட்' அடிக்க முயற்சித்த பேர்ன்ஸ் (33), பன்ட்டிடம் பிடி கொடுத்தார். அடுத்த வந்த லோரன்ஸை, பும்ரா 'டக்' அவுட்டாக்கினார். இது சொந்த மண்ணில் பும்ரா வீழ்த்திய முதல் டெஸ்ட் விக்கெட்டாக அமைந்தது.

சிப்லேயுடன் இணைந்தார் ஜோ ரூட். இருவரும் இந்திய பந்து வீச்சை எளிதாக சமாளித்தனர். ஆடுகளம் கொஞ்சம் கூட பந்துவீச்சாளர்களுக்கு கைகொடுக்க வில்லை. வாய்ப்பை பயன்படுத்திய சிப்லே டெஸ்ட் அரங்கில் 4ஆவது அரைச் சதம் எட்டினார்.

**ஜோ ரூட் சதம்**

அஷ்வின் வீசிய போட்டியின் 55 ஆவது ஓவரில் ஜோ ரூட், அடுத்தடுத்து இரு பவுண்டரிகள் அடித்தார். தொடர்ந்து ஷாபாஸ் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஜோ ரூட், வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார். இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினர். தனது 100ஆவது டெஸ்டில் துடுப்பாட்டத்தில் அசத்திய ஜோ ரூட், சதம் அடித்தார். சமீபத்தில் இலங்கைக்கு எதிராக 228, 186 ஓட்டங்கள் எடுத்த ஜோ ரூட், ஆசிய மண்ணில் 'ஹட்ரிக்' சதத்தை பதிவு செய்தார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக 200 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், பும்ரா வீசிய நேற்றைய கடைசி ஓவரில் சிப்லே (87) ஆட்டமிழந்தார்.

முதல் நாள் முடிவில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்கு 263 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஜோ ரூட் (128) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் பும்ரா 2, அஷ்வின் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.




சதம் அடித்த மகிழ்ச்சியில் எகிறிக் குதிக்கும் ஜோ ரூட்

**100 இல் 100**

டெஸ்ட் அரங்கில் தனது 100ஆவது டெஸ்டில் சதம் அடித்த 9ஆவது வீரர் ஆனார் இங்கிலாந்தின் ஜோ ரூட். இதற்கு முன் கொலின் காவ்ட்ரே (104, 1968, இங்கிலாந்து), மியாண்டாட் (145, 1989, பாக்.,), கிரீனிட்ஜ் (149, 1990, மே.தீவுகள்), ஸ்ரூவோர்ட் (105, 2000, இங்கிலாந்து), இன்சமாம் உல் ஹக் (184, 2005, பாக்.,), ரிக்கி பொன்ரிங் (120, 143, 2006, ஆஸி.,) ஸ்மித் (131, 2012, தெ.ஆப்.,), ஆம்லா (134, 2017, தெ.ஆப்.,) தங்களது 100ஆவது டெஸ்டில் 100 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்தனர்.

**3** கடந்த 2010க்குப் பின் சென்னை மண்ணில் நடந்த டெஸ்டில் அரைசதம் அடித்த எதிரணியின் மூன்றாவது ஆரம்ப வீரர் ஆனார் இங்கிலாந்தின் சிப்லே (87). இதற்கு முன் 2013ல் வோர்னர் (59, ஆஸி.,), 2016ல் ஜென்னிங்ஸ் (54, இங்கிலாந்து) அரைசதம் அடித்தனர்.

**7** ஜோ ரூட் இந்திய மண்ணில் நேற்று தனது 7 வது டெஸ்டில் பங்கேற்றார். இதற்கு முன் விளையாடிய 6 டெஸ்டிலும் ஏதாவது ஒரு இன்னிங்சில் குறைந்தது அரைசதம் அடித்தார். நேற்றும் 7ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் 128 ஓட்டங்கள் எடுத்தார்.



இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரிய நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு விஜயம் செய்தபோது...

# மெஹிடி மிரட்டல்; மே.தீவுகள் பணிவு

முதல் டெஸ்டில் பந்து வீச்சாளர்கள் அசத்த, முதல் இன்னிங்சில் மே.தீவுகள் அணி 259 ஓட்டங்களை எடுத்தது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் சாட்டோகிராமில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் வங்கதேசம் 430 ஓட்டங்கள் எடுத்தன. நேற்று முன்தினம் இரண்டாம் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் மே.தீவுகள் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை எடுத்திருந்தது. பிராத்வைட் (49), போனர் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த மே.தீவுகள் அணிக்கு பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள் தொல்லை தந்தனர். தைஜுல் இஸ்லாம் பந்தில் போனர் (17) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் கிரெய்க் பிராத்வைட் (76) அரைச்சதம் கடந்தார்.

அடுத்து வந்த கைல் மேயர்ஸ் (40), ஜோஷுவா டா சில்வா (42) ஆறுதல் கொடுத்தனர். மறுமுனையில் அசத்திய ஜெர்மைன் பிளாக்வுட் (68) தன்பங்கிற்கு அரைசதமடித்தார். மெஹிடி ஹசன் மிராஸ் 'சுழலில்' ரஹீம் கார்ன்வால் (2), கீமர் ரோச் (0) சிக்கினர். தைஜுல் பந்தில் ஜோமல் வாரிகன் (4) ஆட்டமிழந்தார்.

முதல் இன்னிங்சில் மே.தீவுகள் அணி 259 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் மெஹிடி ஹசன் 4, முஸ்தபிஜுர் ரஹ்மான், தைஜுல் இஸ்லாம், நயீம் ஹசன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின் 2வது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (0), நஜ்முல் ஹொசைன் ஷான்டோ (0), ஷாத்மன் இஸ்லாம் (5) ஏமாற்றினர்.

ஒரு கட்டத்தில் பங்களாதேஷ் அணி முதல் 3 விக்கெட்டுக்களையும் 33 ஓட்டங்களுக்கு இழந்து திணறியது. பின் இணைந்த அணித் தலைவர் மொமினுல் ஹக், முஷ்பிகுர் ரஹிம் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது.

இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வர 2ஆவது இன்னிங்சில் பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 47 ஓட்டங்கள் எடுத்து, 218 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்தது.



ஒவ்சைட்டின் ஊடாக பந்தை செலுத்தும் மே.தீவுகளின் ஜோஷுவா

# பெரும்பான்மை மக்களுக்கு மாத்திரம் செயலாற்றுவேன் என்பதை ஏற்க முடியாது

(திருமலை)

**சிறுபான்மை மக்கள், தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பேரணியேயன்றி, பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பேரணியல்ல என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நடைபவனியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன் மேலும் கூறியுள்ளதாவது, "சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையை கண்டித்தும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காகவே இந்தப் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நடைபவனி முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த பேரணி பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்நாட்டில் சிங்கள, பௌத்த மக்களுக்கு இருக்கும் சகல உரிமைகளும் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கும் உண்டு. ஏனெனில் நாங்களும் இந்நாட்டின் குடிமக்கள் என்றாலும் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுதந்திரதின நிகழ்வில் பேசும்போது நான் சிங்கள பௌத்தன் என்று தெரிவித்தார்.

மேலும் அவர் அவ்வாறு கூறியது எங்களுக்கு பிரச்சினை இல்லை. எனினும் இந்நாட்டின் ஜனாதிபதி, பெரும்பான்மை மக்களுக்கு மாத்திரம் சேவையாற்றுவேன் என்று தெரிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எங்களுக்கும் இந்நாடு சொந்தமானது. நாங்களும் வசிக்கின்றோம். அதேபோன்று பெரும்பான்மை மக்களும் இந்நாட்டில் வசிப்பதற்கான உரிமை உள்ளது. எங்களின் உரிமைகளை அகற்ற முடியாது. இதன் அடிப்படையில் நாங்கள் இந்த நடைபவனியை மேற்கொள்கின்றோம்" என தெரிவிததுள்ளார். (நி-4)

# அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்ப துரித நடவடிக்கை

(கொழும்பு)

170 தேசிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களை விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான நோமுகப் பரீட்சைகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளை அரச சேவைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை வெற்றிடமாக இருந்த 100 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-4)



**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி கொழும்பு செட்டியார் தெரு வர்த்தகர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.**

**மலையகத்தில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில் செட்டியார்தெரு வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

## உள்ளூர் ரப்பரை பயன்படுத்தி ரேடியல் ரயர்

(கொழும்பு)

உள்ளூர் ரப்பரைப் பயன்படுத்தி விவசாய வாகனங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய முதல் ரேடியல் ரயர் நேற்று முன்தினம் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதை குளோபல் ரப்பர் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிடெட் தயாரித்துள்ளது.

ஒரு நாளைக்கு சுமார் 600 உயர்தர ரேடியல் ரயர்களை உற்பத்தி செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதனால் எமது நாட்டு உற்பத்தி இலாபத்தை அதிகரிக்கும். (நி)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர். சின்னத்தம்பி குமாரசாமி [புலவர்]

(வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலி நிதி ஸ்ரோர் உரிமையாளரின் தந்தையாரும்)

பிறப்பு: 04.03.1937
இறப்பு: 07.01.2021



ஒரு கண்ணில் அன்பும்
மறு கண்ணில்
கண்டிப்புமாய்
எமை ஆளாக்கிய
தெய்வமே
உம்மை ஒரு
நொடியும் மறவோம்

எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 06.02.2021 இன்று எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழலவிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5496)

காளிகோவிலடி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



31ம் நாள் நினைவுகளும் அம்மாவின் நிஜமுகமும்

மண்ணில்
12 - 05 - 1939



விண்ணில்
07 - 01 - 2021

அமரர்.திருமதி.சின்னத்துரை அன்புமலர்

தமிழுக்கும் அமுதென்று பேர்
எங்கள் அன்னைக்கு அன்பு மலரென்று பேர்
பெயருக்கேற்றது போல் அன்பு நிறைந்தவள்
எப்போதும் மலர்ந்த முகத்தினள்
பாவம் அவள் வாழ்வோ துயர் நிறைந்தது
பால்யப் பருவத்தில் பெற்றோரை இழந்தவள்
திருமணத்தின் பின் தானீன்ற குஞ்சுகளை
பிஞ்சு பிஞ்சாய் பறி கொடுத்தவள்
நோய் பல தடவை மரணம் வரை அவளை
இழுத்துச் சென்றது. ஆனாலும்
அவற்றிலிருந்தெல்லாம் மீண்டெழுந்தவள்
மீதமிருக்கும் பிள்ளைகளுக்காய்
அளப்பரிய தியாகங்கள் புரிந்தவள்
இவ்வேளை மீண்டுமொரு இடி அன்னைக்கு
ஆம். விடலைக் குமரியான மகளையும்
கட்டிய கணவனையும் காலன் பறித்தெடுத்தான்.
துயரமே பாரமாக சோகமே சுமையாக
வாழ்வு கடந்து சென்றது.

இனி இயலாதென்றோ படுக்கையில்
வீழ்ந்தாள் எம் அன்னை
படுக்கையில் வீழ்ந்த சில மாதங்களில்
மூத்த மைந்தனின் அவலச்சாவு
பெற்ற வயிறு பற்றியெரிய
துடித்தாள் துவண்டாள்
வேதனைப் படுவதைத் தவிர
வேறென்ன முடியும் எம்மால்
ஒரு வருடத்திற்கும் மேலாகப் படுக்கையில் அவள்
பட்ட வேதனை சொல்லி மாழாது
காலனே எம் அம்மாவிடம் அப்படி
உனக்கென்ன கோபம்
நிம்மதியான சாவைக்கூட
கொடுக்கவில்லையே நீ அவளுக்கு
அன்பக்காவே மலரக்காவே
கல்லறையிலாவது அமைதியாய்
தூங்கு அம்மா தூங்கு!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5523)

சம்மட்டியோலை,
உடுவில் வீதி, மானிப்பாய்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

# போராட்டத்திற்கு ஆதரவளிக்கக்கோரி தென்மராட்சியில் விழிப்புணர்வு

(சாவகச்சேரி)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்திற்கு ஆதரவளிக்கக் கோரி தென்மராட்சி பொது அமைப்புக்கள் நேற்று வெள்ளிக்கிழமை விழிப்புணர்வு ஒன்றினை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தனர்.



அரசியல் கைதிகள் விடுதலை, நில ஆக்கிரமிப்பு, இன அடக்குமுறை, தமிழர்களின் கலை கலாசாரங்களை பேணிப் பாதுகாத்தல் உள்ளிட்ட சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கோரி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்டு வரும் அகிம்சைப் போராட்டத்திற்கு தென்மராட்சி மக்கள் வலுச்சேர்க்க வேண்டும் எனக் கோரி குறித்த விழிப்புணர்வு நிகழ்வு கொடிகாமம் பொதுச் சந்தை மற்றும் சாவகச்சேரி பொதுச்சந்தை உள்ளிட்ட இடங்களில் இடம்பெற்றன.

குறித்த பேரணி இன்றைய தினம் சாவகச்சேரி பகுதிக்கு வரும்போது அனைத்து மக்களும் குறித்த பேரணியுடன் இணைந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், சசிகலா ரவிராஜ், சாவகச்சேரி நகர சபை தவிசாளர் சிவமங்கை, சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் மயூரன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (5-9-30)

# கட்சி பேதமின்றி போராட்டத்திற்கு ஆதரவு வழங்குங்கள்

## இணைப்பாளர் கோரிக்கை

(குப்பிழான்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் கவனயீர்ப்புப் பேரணியில் பொதுமக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவை வழங்க வேண்டும் என மேற்படி போராட்டத்தின் வட மாகாண இணைப்பாளர் சி.இளங்கோவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட-கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்படும் அகிம்சை ரீதியிலான மாபெரும் போராட்டம் தொடர்பான வடமாகாண ஏற்பாட்டுக் குழுவினருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள தந்தை செல்வா கலையரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரணி முல்லைத்தீவிலிருந்து வவுனியா ஊடாக மன்னாரைச் சென்றடைந்து இன்று காலை மன்னாரிலிருந்து புறப்பட்டு துணுக்காய்-மாங்குளம் ஊடாக கிளிநொச்சி ஊடாக யாழ்.நகரை வந்தடையும் போராட்டம் பின்னர் அங்கிருந்து பொலிகண்டி வரை சென்றடையவுள்ளது.

நாட்டிற்கோ அல்லது சிங்கள மக்களுக்கோ எதிரான போராட்டம் இதுவல்ல. தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டில் எதிர்கொள்ளும் எத்தனையோ இன்னல்களுக்கு எதிராக நாங்கள் எங்கள் உரிமைகளைக் கோரிப் போராடும் போராட்டம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18)

# மனித உரிமைகளைப் பாதுகாக்க தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்

(சாவகச்சேரி)

மலையக மக்களின் சம்பளப் பிரச்சினை மற்றும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் விடயத்தில் சுதந்திரக்கட்சி தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்ற சுதந்திரக்கட்சியின் மாநாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சகோதர இன மக்களான முஸ்லிம் மக்கள் கொரோனா காலத்தில் ஜனாஸாக்கள் விடயத்தில் பெரும் துயரத்தை அனுபவித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இது சம்பந்தமாக உரியதரப்பிடம் பேசி, போராடி அவர்களுக்கான உரிய மத உரிமையைப் பாதுகாப்பதற்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதேநேரம் மலையக மக்கள் குறைந்தது ஆயிரம் ரூபாய் சம்பளம் கூட பெற முடியாத நிலைமையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்காகவும் சுதந்திரக்கட்சி குரல் கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (5-4-30)

# மக்களின் நன்மை கருதி திணைக்களங்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின்கீழ் வரும் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின்கீழ் வரும் காணித் திணைக்களம் என்பவற்றை மாங்குளம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களுக்கு இடமாற்றுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் என வடக்கின் அனைத்து மாவட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வரும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் கிளிநொச்சிக்கு இடமாற்றப்படவிருப்பதாகவும் அதிகளவு காணி தொடர்பான பிணக்குகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலேயே காணப்படுவதால் அந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு வசதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த முடிவின்படி, வடக்கின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் மாகாண சபை நிர்வாகத்தை சம அளவில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5-4-350)

# பிரிவிடல் தொகுதி திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை பிரிவிடல் தொகுதி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா அறிகுறிகளுடன் வைத்திய சாலைக்கு வரும் நோயாளர்களைத் தனியாக வைத்து பரிசோதனை செய்வதற்கான பிரிவிடல் தொகுதியே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியைச் சேர்ந்த சமூக சேவகர் பொ.உருத்திரன் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக குறித்த பிரிவிடல் தொகுதிக்கான நிதி அனுசரணையை வழங்கியுள்ளார்.

பிரிவிடல் தொகுதியை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி. டயாழினி மகேந்திரன் மற்றும் சமூக சேவகர் உருத்திரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

மேலும் நிகழ்வில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் நலன்பரிச் சங்கத்தினர் கலந்து கொண்டனர். (5-4-30)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)


சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள் அனைவரும் தற்போதைய சுகாதார நடைமுறைகளுக்கு அமைய கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# பாலர் கலைவிழா

(குப்பிழான்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் கலை விழா (2020/ 2021) நாளை 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் ரி.சேத்திரபாலன் (MD) (ATLANTA HOSPI TTAL) கலந்து கொள்வார். (5-4-18)




2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் யாழ்ப்பாண பிரதேசத்தில் சிறந்த இளைஞருக்கான விருது இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் சகாய அன்ரனி சந்தோஸ் என்ப வருக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் பொதுக்கூட்ட நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவல் குறித்த விருது வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-சுபேசன்)

# தமிழர்களை ஜனநாயக போராட்டத்திற்குள் ராஜபக்ஷ அரசு தள்ளிவிட்டிருக்கிறது-மனோ

(கொழும்பு)

தமிழ் பேசும் இலங்கையர்களின் தேசிய இருப்பை அழித்தொழிக்கும் ஒடுக்குமுறை ராஜபக்ஷ அரசு செய்து வருகிறது.

தமிழ் மொழியை பேசுகின்ற இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களைக் கடைப்பிடிக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை ஜனநாயக போராட்டங்களை நோக்கி தள்ளி விட்டுள்ளது என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நடப்பு ராஜபக்ஷ அரசின் "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற கூச்சல் நடைமுறையில், "ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம்" என்பதில் வந்து நிற்கிறது. இதை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளோம்.

இந்த ஏகபோக கொள்கையை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதை இந்நாட்டு அரசும் உலகமும் புரிந்துகொள்ள வேண்டும்.

அடக்குமுறைகளுக்கு எதிராக இந்நாட்டில் எமது இருப்பை உறுதி செய்து கொள்ள நாம் போராட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நீண்டகாலமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த தேசிய ஜனநாயக போராட்டம் இப்போது ஆரம்பித்திருப்பதை எண்ணி மகிழ்கிறேன்.

இலங்கை திருநாடு, "பன்மொழி, பன்மத, பல்லின" அடிப்படையை கொண்ட பன்மைத்துவ நாடு என்ற இலக்கு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பங்கும், இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சியுரிமை, இறைமை ஆகியவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற மறுக்கப்பட முடியாத உரிமையும் உறுதிப்படுத்தப்படும்வரை இப்போராட்டம் தொடர வேண்டும் என்று குறிப்பிட்டார். (நி-4)

# கண்டியில் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் திறப்பு

(ஹற்றன்)

வெளி விவகார அமைச்சு கண்டியில் பிராந்திய கொன்சியூலர் அலுவலகமொன்றை திறக்கவுள்ளது.

வெளி விவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் வழிகாட்டுதலின் கீழ், பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளின் செயற்றிறனையும் செயலாண்மையையும் மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் தேசியக் கொள்கைக் கட்டமைப்பான "நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செழிப்பான பார்வை" எண்ணக்கருவிற்கு உத்வேகமளிக்கும் முகமாக பிராந்திய கொன்சியூலர் அலுவலகமொன்றை வெளிநாட்டு அமைச்சு இன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டியில் திறந்து வைக்கவுள்ளது.

பேராதனை, கட்டம்பேயில் உள்ள மகிந்த ராஜபக்ஷ தகவல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகமானது வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவின் முன்னிலையில் அமைச்சர் குணவர்த்தனவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இந்த கொன்சியூலர் அலுவலகத்தைத் திறந்து வைப்பதானது மத்திய மாகாணம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்குச் செல்லாமல் கொன்சியூலர் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

பொதுமக்களுக்காக விரிவுபடுத்தப்பட வேண்டிய கொன்சியூலர் சேவைகளில் வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்கான பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள், கல்வி மற்றும் ஏனைய சட்ட ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துதல், வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்குதல், புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களின் நிவாரண மற்றும் இழப்பீட்டுக் கோரிக்கைகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து மனித உடல்களைத் திருப்பிக் கொண்டு வருதல் ஆகியன உள்ளடங்கும். (நி-4)

# கேகாலை சிறைக்கைதிகளிடம் இருந்து தொலைபேசிகள்,பற்றரிகள் மீட்பு

(கேகாலை)

கேகாலை சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளிடம் இருந்து 5 கையடக்க தொலைபேசிகள், 11 தொலைபேசி மின்கலங்கள் மற்றும் 10 சிம் அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கை ஒன்றின்போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு கேகாலை சிறைச்சாலையின் விசேட பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களிடம் இருந்தும் மூன்று கைத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் ஐஸ் கான் என்ற போதைவஸ்து கடத்தல்காரரிடம் இருந்தும் கைத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)


## சேவைநலன் பாராட்டு

திருமதி.பகீரதி கேசவன் (SLTS - I)

(SP.English.Trd.University of Jaffna)

ஆசிரியப் பணியில் முடிசூடி இன்றுடன் (06.02.2021) முப்பத்தேழு வருடங்கள். இக்காலத்தில் எமது கல்லூரியில் ஏழு வருடங்கள் (06.02.2014 – 06.02.2021) ஆங்கிலப்பாடமதை கசடறக் கற்றுக்கொடுத்ததோடு பகுதித் தலைவராகவும் இருந்து அளப்பரிய சேவை புரிந்து இன்றுடன் இளைப்பாறும் உங்கள் சேவையினை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.






அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசார ஊழியர் நலன்புரிச்சங்கம்.
யா/இணுவில் மத்திய கல்லூரி

(5528)



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்

***31 பங்குரு ஒழுங்கை, வட்டாரம் - 02***

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் – 02 பங்குரு ஒழுங்கை 31 ஆகிய ஆதனம் எனது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் மனோன்மணி பழனியப்பா என்னும் பெயரில் காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு நாகமுத்தாபிள்ளை பழநியப்பர் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2782/26.10.1930 ஆம் இலக்க உறுதியால் அறுதியாக பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

அவர் இறக்க குறித்த ஆதனம் அவரின் மனைவி நாகமுத்தாபிள்ளை பழனியப்பர் கைம்பெண் மனோன்மணி, பிள்ளைகளாகிய பழநியப்பர் பரமேஸ்வரி, பழநியப்பர் இரத்தினசபாபதி, துரைராஜ் கைம்பெண் ஜீவமலர் (பழனியப்பர் மகள் ஜீவமலர்), பழநியப்பர் சண்முகராசா (இறப்பு) ஆகியோரைச் சென்றடைந்தது.

பழநியப்பர் இரத்தினசபாபதி தனது 9/80 பங்கினை பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9961/29.04.1961 ஆம் இலக்க உறுதி மூலம் பழநியப்பர் ஜீ சீவமலருக்கு அறுதி விற்றிருந்தார்.

நாகமுத்தாபிள்ளை பழனியப்பர் கைம்பெண் மனோன்மணி, பழனியப்பர் பரமேஸ்வரி ஆகியோர் தமது 62/80 பங்கினை பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10256/21.05.1962 ஆம் இலக்க உறுதி மூலம் பழனியப்பர் ஜீ சீவமலருக்கு அறுதி விற்றிருந்தார். மிகுதி 9/80 பங்கினை துரைராஜ் கைம்பெண் ஜீவமலர் பிதா வழி முதுசமாக பெற்று சொந்தமும் ஆட்சியுடையவராக இருந்தார்.

மேற்படி விடயங்கள் அனைத்தும் குறிப்பிட்டு துரைராஜ் கைம்பெண் ஜீவமலர் பிரசித்த நொத்தாரிசு தில்லைநாதன் அருச்சுனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 732/20.08.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த முழு ஆதனத்தினையும் பூபாலசிங்கம் புலேந்திரன் ஆகியவருக்கு அறிதி விற்றிருந்தார்.

பூபாலசிங்கம் புலேந்திரன் என்பவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பூபாலசிங்கம் புலேந்திரன் என்பவரிற்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

(5507)



## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
MARUTHANAARMADAM CHUNNAKAM

**தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் க.பொ.த.(உயர்தரம்) சித்தியடையாதோர், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழில் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture** (விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிகள்)

1.தேசிய தொழில் தகைமை மட்டம் 3 (4 மாதகாலப் பயிற்சி நெறி)
தகைமை – க.பொ.த.சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16 – 24 வயதிற்குட்பட்டவராக இருத்தல்.

2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (ஒரு வருட காலப் பயிற்சி நெறி)
தகைமை – NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16 - 26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பயிற்சி கட்டணம் இலவசம்

பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 24.02.2021 அன்று காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வேறு இரு நற்சான்றிதழ்களுடன் தற்போது உள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நேரில் சமுகமளிக்கவும்.

**மேலதிக விபரங்கள்**
**அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி**
**விவசாய நிறுவனம்,**
**மருதனார்மடம்,**
**சுன்னாகம்.**

**தொலைபேசி 021 224 1420**
**மின்னஞ்சல் :**
**jcinstituteofagriculture@gmail.com**

(5521)

# விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கட்டடத்தொகுதி திறந்துவைப்பு





(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கட்டடத்தொகுதித் திறப்புவிழா நேற்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறி.சற்குணராஜாவின் தலைமையில் நடைபெற்றது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிரா சுகியாமா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (5-4-100)

# கிராம உத்தியோகத்தர் பிரிவை ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை

(அக்கராயன்)

ஒட்டுசுட்டான் சின்னசாளம்பன் கிராம மக்கள் மூன்று கிலோ மீற்றர் தூரம் சென்று ஒட்டுசுட்டான் பொது மண்டபத்தில் இயங்குகின்ற கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு தமது தேவைகளுக்காகச் செல்ல வேண்டி உள்ளது.

சின்னச்சாளம்பன் கிராமத்தில் சுமார் 350 குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்கள் தங்கள் கிராமத்திற்கென ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச செயலகத்திடம் முறைப்பாடு செய்தனர்.

மேலும் தங்களின் இப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு சின்னசாளம்பன் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-350)

# மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளர் அலுவலகம் வவுனியாவில் திறந்து வைப்பு

(குருமன்காடு)

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளர் அலுவலகம் வவுனியாவில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளராக ம.புஸ்பதேவா நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் கைத்தொழில் அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர் அலுவலகத்தை மாவட்ட அரச அதிபர் சமன்பந்துல சேன திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில், பொதுஜன பெரமுன கட்சியின் தமிழ் பகுதி இணைப்பாளர் பிறேம், மதகுருமார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(5-4-250)



ஹார்மோனியக் கலைஞர் பிலிப் ஜோன் கபாஸின் 7 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அண்மையில் உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலய முன்றலில் நடைபெற்றது.

# காணி பிரச்சினையை தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்கவும்

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வேம்பொடுகேணி கிராம உத்தியோகத்தர் பிரிவின் இந்திராபுரம் கிராம மக்களின் காணி பிரச்சினையை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு காணி முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் இராஜாங்க அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனாவிடம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சருக்கு தவிசாளர் எழுதியுள்ள கடிதத்தில் வடக்கில் இடம்பெற்ற பல்வேறு வன்செயல்களில் பாதிக்கப்பட்ட குடியிருப்பதற்கு காணிகள் அற்ற மக்களுக்கு 1982 ஆம் ஆண்டு அரசினால் 143 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா ஒரு ஏக்கர் மூலம் காணிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் குறித்த காணிகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

ஆனால் இன்றுவரை குறித்த பகுதியில் 40 வருடங்களுக்கு மேலாக குடியிருக்கும் மக்களுக்கான காணி ஆவணங்கள் எதுவும் இதுவரை அரசால் வழங்கப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் தமது வாழ்வியலில் அன்றாடம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். எனவே இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஒன்றை முன்வைக்குமாறு அமைச்சரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (5-4-315)



வவுனியா பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் மகளிர் அபிவிருத்தி நிலைய பிரதேசமட்டக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. (படங்கள்:-வசந்தரூபன்)

# இராசிபலன்

06.02.2021
தை 24, சனிக்கிழமை
நவமி முற்பகல் 9.26 மணிவரை
அனுசம் மாலை 6.21 மணிவரை
சுபநேரம் 3.35 - 5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி

வளவன்


மேஷம்

உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் கூடும் நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.


ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், கடன் தொல்லைகள் குறையும், போசன சுகமுண்டு.


மிதுனம்

வியாபார விருத்தி ஏற்படும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், ஆரோக்கியமான நாள், வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


சிம்மம்

பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் சில உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும் நாள், செயற்பாட்டில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.


விருச்சிகம்

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், உறவினர் பகை அகலும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வளர்ச்சிப்பாதையை நோக்கி நகர்வீர்கள்.


தனுசு

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் கூடும் நாள், சஞ்சலங்கள் கூடும் நாள்.


மகரம்

வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலாபகரமான நாள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.


மீனம்

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தேக நலன் சீராகும்.

வருமுன்னர் காக்காவிட்டால் வாழ்க்கை பாழாம்

# தொடர் போராட்டத்தை தடுக்கவே வீதிகளில் ஆணிகள் வைக்கப்பட்டன


(திருமலை)

எமது பேரணியினை தடுக்கவே வீதிகளில் ஆணிகள் வைக்கப்பட்டன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியின் மூன்றாவது நாள் நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் பேரணி பயணிக்கும் வீதிகளில் ஆணிகள் எறியப்பட்டு, பேரணியில் பங்கேற்ற வாகனங்களின் டயர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

பேரணி வரும் வீதிகளில் ஆணிகளை வைத்து பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியை தடுத்து நிறுத்தும் மிக மோசமான முயற்சிகள் இடம்பெற்றுள்ளன என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.



"இதனை யார் செய்தார்களோ தெரியாது. நாங்கள் உங்களை அடிக்க வரவில்லை. குழப்பம் செய்ய வரவில்லை. நியாயம் கேட்டே செல்கிறோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# எக்மோ சிகிச்சையை அதிகரிக்குமாறு
## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)


நாட்டில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை திறனாக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.


நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது வைத்தியர் ஹரித அளுத்கே இதனை தெரிவித்துள்ளார்.

கொவிட் மரணங்களில் 70 வீதமானவர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் எனவும் குறித்த வயதிற்கு உட்படவர்களுக்கிடையில் தொற்றாளர்கள் அதிகரிப்பின் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருமண நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளில் அதிகளவான மக்கள் ஒன்றிணைவதால் தொற்று அதிகளவில் பரவலாம் எனவும் தொற்றாளர்களுக்கு வழங்கப்படும் எக்மோ சிகிச்சை குறிப்பிட்ட அளவில் இருப்பதால் அதனை அதிகரிக்க நடிவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரம்
# முடங்கியது மலையகம்





(ஹற்றன்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் குறித்த அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கும் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் குறித்து இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் இணக்கம் ஏற்பட்டிருக்கவில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதன அதிகரிப்பு குறித்த விடயத்தை தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சம்பள நிர்ணய சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில் இன்று சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், அதன் ஆரம்பகட்டமாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும் சம்பள நிர்ணய சபைக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு அழுத்தம் கொடுக்கும் முன்னோடி ஏற்பாடாக நேற்று அமைதியான ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பை நடத்தினார்.

இந்நிலையில் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி, ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# யாழ்.குடாநாட்டில் பற்றிக் தொழிற்சாலை விரைவில் அமைக்கப்படும் - தயாசிறி



(யாழ்ப்பாணம்)


உள்ளூர் கைத்தறி துணி உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொண்டு தருமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்திருந்த கோரிக்கைக்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர இணக்கம் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேசத்தின் ஆளுகைக்குட்பட்ட புங்குடுதீவு பிரதேசத்திற்கு நேற்றுக்காலை விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் தயாசிறிஜயசேகர அங்குள்ள தையல் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கைத்தறி உற்பத்திக்கான பொருட்களை 30 பெண்களுக்கு வழங்கி வைத்து 3 மாத பயிற்சி நெறியையும் ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் கருணாகர குருமூர்த்தி மற்றும் குறித்த பிரதேச சபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இராஜாங்க அமைச்சர் சாதகமான பதிலை வழங்கினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாக யாழ்.மாவட்டத்திலுள்ள சுயதொழிலில் ஈடுபடக்கூடிய இளைஞர், யுவதிகளை இணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதுடன் புங்குடுதீவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பற்றிக் கைத்தொழில் உற்பத்தியைப் போன்று யாழ்.மாவட்டத்தில் ஏனைய பிரதேசங்களிலும் காணப்படும் குறித்த உள்ளூர் பற்றிக் உற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்து தருமாறும் கோரியதுடன் அதுபோன்று புதிதாகவும் நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் அதேபோன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் குறித்த உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான யோசனைக்கமைவாக யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் இது போன்ற நிலையங்களை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். (4-5)





வல்வெட்டி வேவில் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வரர் தேவஸ்தான நுழைவாயில் அலங்கார அமைப்பு, வேவில் விக்னேஸ்வரா சிறுவர் பூங்கா மற்றும் வேவில் விக்னேஸ்வரா அறநெறி பாடசாலை கட்டடம் ஆகியன வேவில் ஆலய பிரதம குருமார்களான சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக்குருக்கள் மற்றும் சிவஸ்ரீ தி.விக்னேஸ்வரக்குருக்கள் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.





மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து "லட்சுமி கரங்கள்" அமைப்பினால் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 21 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வு மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்:-ஜோசப் நயன்)



நீரிழிவு தொடர்பாக பத்து வைத்திய நிபுணர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கிய புத்தகங்கள் யாழ். நீரிழிவு கழகத்தினர் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் வழங்கினர்.


இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

தேசிய இளைஞர் படையணி

## வெற்றிடம்

தேசிய இளைஞர் படையணியில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### மேலதிக பணிப்பாளர்
(நிர்வாகம் மற்றும் நிதி) (HM 1-1)

இந்தப் பதவி நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு உரித்தாகும்.

இந்தப் பதவிக்காக விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களும்,

அ. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

ஆ. பதவிக்காக ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகுதியுடையவராகவிருத்தல் வேண்டும்.

இ. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) **(HM 1-1)** - தலைமையகத்திற்கு

**கல்வித் தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2).**

1. வியாபார நிர்வாகம் (விசேடம்), வியாபார நிர்வாக மனிதவள முகாமைத்துவம், விஞ்ஞானமாணி முகாமைத்துவம் (அரச) விசேட, வர்த்தகமாணி (விசேடம்), விஞ்ஞானமாணி மனித வளங்கள் முகாமைத்துவம் (விசேடம்), வியாபார முகாமைத்துவம் (மனித வளங்கள்) விசேடம், விஞ்ஞானமாணி (வியாபார முகாமைத்துவம்) விசேடம், சட்டமாணி, தொழில் கல்விமாணி, விஞ்ஞானமாணி முகாமைத்துவம் (அரச), வர்த்தகமாணி (சாதாரணம்) போன்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   அரச நிர்வாகம், அரச முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், பொருளியல், சட்ட விடயங்கள், ஊழியர் மற்றும் மனித வளங்கள் முகாமைத்துவம், அரசறிவியல் தொடர்பான பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் / நிர்வாக முகாமைத்துவம், நிதி விடயங்கள் துறையில் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் விடயத் துறையில் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் விடயத் துறையில் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
**(பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. மேற்குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை (MM) சேவை வகுதியில் 1ஆம் வகுப்பு பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது** :- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளத் திட்டம்** :- HM 1-1 - 2/2016 ரூபா 81,670 – 15x2,270 = ரூபா 115,720

இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

இந்தப் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் பொருத்தமான மாதிரியின் பிரகாரம் விண்ணப்பத்தைத் தயாரித்து விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் சகிதம் 2021-02-19ஆம் திகதி அல்லது அதற்கு முன் எமக்குக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **vacancy@youthcorps.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

முழுமையற்ற, இயைபுடைய தகைமைகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**தேசிய இளைஞர் படையணி,**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**

**தலைவர்**
**தேசிய இளைஞர் படையணி,**

2021-02-05.

# இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக வெளிநாடுகளில் திரண்ட தமிழர்கள்









இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை தாயக மக்களுடன் இணைந்து பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் நேற்று முன்தினம் கரிநாளாகக் கடைப்பிடித்து கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இனப்படுகொலைக் குற்றங்களுக்கு நீதி கோரியும் சர்வதேச நீதி விசாரணையை வலியுறுத்தியும் இராணுவமயமாக்கல், திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் அவர்கள் இந்தப் போராட்டங்களின் போது கோசமெழுப்பினர்.

பல தடைகள் மற்றும் கடுமையான கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சிறைத்தண்டனையை முடித்து வெளியேறினார் இளவரசி



(பெங்களூர்)

பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் இருந்து இளவரசி விடுதலையானார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

இதில் தண்டனைக் காலம் நிறைவடைந்ததால் கடந்த 27 ஆம் திகதி சசிகலா விடுதலை செய்யப்பட்டார்.

இளவரசியின் தண்டனைக் காலம் நிறைவு பெற்றதும் பெப்ரவரி 5 ஆம் திகதி விடுதலை ஆவார் என்று பெங்களூர் சிறைத்துறை நிர்வாகம் தெரிவித்து இருந்தது.

அதன்படி அவர் நேற்று வெள்ளிக்கிழமை பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் இருந்து விடுதலையானார்.

4 ஆண்டு தண்டனைக் காலம் முடிந்ததால் சசிகலாவை தொடர்ந்து சிறையில் இருந்து இளவரசியும் விடுதலையானார். (நி-4)

## குழந்தை பெற்று 3 மாதங்களின் பின் தனது செல்ல மகளை சந்தித்த தாய்



(வோஷிங்டன்)

கொரோனாவில் சிக்கியதால் குழந்தையைப் பெற்று 3 மாதங்களுக்கு பின்னர் தனது செல்லமகள் லூசியை கொஞ்சி மகிழ்ந்தார் .

குழந்தையை பெற்றெடுக்க இருந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம், கொரோனா தாக்கியது. அவர் அங்குள்ள சென். மேரி மருத்துவமனையில் நவம்பர் 4 ஆம் திகதி சேர்க்கப்பட்டார்.

அவரை மருத்துவ ரீதியில் கோமாவில் ஆழ்த்திய டாக்டர்கள், சிசேரியன் அறுவை சிகிச்சை செய்து, பெண் குழந்தையை பிரசவிக்கச் செய்தனர். கெல்சியின் ஒட்சிசன் அளவு மிகக் குறைவாக இருந்ததால் டாக்டர்கள் இதைச் செய்தனர். டிசெம்பர் மாத இறுதியில் கெல்சிக்கு நுரையீரல்மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டியது வரும் என டாக்டர்கள் கருதினர்.

ஆனால்அவரது உடல்நிலை திடீரென நன்றாக தேறத்தொடங்கியது. ஜனவரி மாதம் மத்தியில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து அவர் சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டார். இதற்கிடையே அவரது குழந்தை லூசி எனப் பெயரிடப்பட்டு தந்தை டெரக் டவுன்செண்ட் பராமரிப்பில் வளரத்தொடங்கினாள்.

ஏறத்தாழ 3 மாதங்களுக்கு பின்னர் இப்போது குணம் அடைந்து, கெல்சி வீடு திரும்பியுள்ளார். "நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். நான் உன்னை வெகுவாக தவறவிட்டு விட்டேன்" என்று கூறிக்கொண்டே 3 மாதங்களுக்கு முன்னர் பிறந்த தனது செல்லமகள் லூசியை கொஞ்சி மகிழ்கிறார். (நி-4)

## ஆங் சான் சூகியை உடனே விடுதலை செய்ய வேண்டும்

### ஐ.நா.பாதுகாப்பு சபை வலியுறுத்தல்



(மியன்மார்)

மியன்மாரில் கைது செய்து சிறை வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகியை உடனே விடுதலை செய்ய வேண்டும் என ஐ.நா.பாதுகாப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

மேலும், மியன்மாரில் நிலவும் சூழ்நிலை கவலை அளிப்பதாகவும் ஐ.நா.பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

எனினும், அடுத்த ஒரு வருடம் வரை நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெறும் என்றும் அதன் பிறகு தேர்தல் நடத்தப்பட்டு வெற்றியாளரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் மியன்மார் அரசாங்கத்துக்கும் அந்த நாட்டு இராணுவத்துக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வந்த நிலையில், அண்மையில் இராணுவம் அதிரடியாக ஆட்சியைக் கைப்பற்றியது.

நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைண்ட் உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் மூத்த அரச அதிகாரிகளை இராணுவம் கைது செய்து சிறை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சுழிபுரம் வைக்கிங்ஸ் அணியை விரட்டியது வேங்கை



ஆட்டநாயகன்





அணித் தலைவர்

ஞானம்ஸ்பெயின்ட் சம்பியன் வெற்றிக் கிண்ணம் 2021 தொடரின் 5 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த மாதம் 31 ஆம் திகதி நடைபெற்றது.

போட்டியில் வடமராட்சி வேங்கைகள் அணி சுழிபுரம் வைக்கிங்ஸ் அணியை ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்று தமது முதல் வெற்றியை பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வடமராட்சி வேங்கைகள் அணி 17 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

105 வெற்றி இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் அணி 17 ஓவர்களால் 8 விக்கெட்டுகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக வடமராட்சி அணியின் சாம்பவன் தெரிவு செய்யப்பட்டார். (4)

## நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு



(கண்டி)

அண்மைக்காலமாக சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழியும் பிம்புரத்தேவ நீர்த்தேக்கத்திற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருந்த இளைஞரொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

நீர்த்தேக்கத்தில் நீர் பெருக்கெடுத்ததால் இவ்வனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி கலகெதர பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (நி-4)

## கருங்கல்லில் சிக்கி குழந்தை உயிரிழப்பு


### தந்தை கண்முன்னே கொடூரம்

(பதுளை)

பண்டாரவெல- ஹல்தும்முல்லை - ஹரங்கஹவ பிரதேசத்தில் 4 வயதுடைய குழந்தையொன்று கருங்கல் ஒன்றில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயரிழந்துள்ளது. நேற்று முன்தினம் மதியம் குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. வெலிமடை உட பேருவ பிரதேசத்தைச் சேர்ந்த குழந்தை ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது. தாய், தந்தையுடன் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்று தந்தையுடன் உணவருந்திக் கொண்டிருந்த வேளையில் இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (நி-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2225

யுவன்




பிரதீப்




சுபா




கஸ்தூரி




ஜீவா

நம்ம சொந்தத்துல வருகிற
சண்டையைப் பாருங்களேன்
பத்திரிகையில பேர் போடல
விஷேசத்துக்குப் கூப்பிடல
மதிக்க மாட்டேங்கிறான்
சாப்பாடு தரல
இதைத்தான் பெரிய லெவல்ல
பண்ணி வருசக்கணக்கா
பேசாமல் இருப்பாங்கா.

அனு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கிழக்கு முனைய ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் முடிவு ஒரு தலைப்பட்சமானது



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் ஜப்பான், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து 2019 ஆம் ஆண்டு மே மாதம் மேற்கொண்ட முத்தரப்பு இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய இலங்கை எடுத்துள்ள முடிவு "ஒரு தலைப்பட்சமானது மற்றும் வருந்தத்தக்கது" என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள ஜப்பான் தூதரக அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி த இந்து இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகிரா சுகியாமா, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை சில நாட்களுக்கு முன்னர் சந்தித்த போது இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடியதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக்கு முன்னதாக, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை இவ்விடயம் தொடர்பில் சந்தித்திருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், இந்த முதலீடு தொடர்பில் இந்தியா எதிர்பார்ப்புடன் இருந்ததாக இந்து நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவுக்கு கிழக்கு முனையத்துக்குப் பதிலாக மேற்கு முனையத்தில் முதலீடு செய்ய வாய்ப்பளிக்கப்படும் என இலங்கை தெரிவித்துள்ளபோதும், இது தொடர்பில் இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என இந்தியத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் ஜப்பான், இந்தியா மற்றும் இலங்கை ஆகியன இணைந்து 2019 ஆம் ஆண்டு மே மாதம் மேற்கொண்ட முத்தரப்பு இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யவதாக கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நிலையில் இது குறித்து ஜப்பானிய அரசாங்கம் விரிவாக ஆராய்ந்து வருவதாக இந்தியாவில் உள்ள ஜப்பான் தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துடன் இந்தியாவும் ஜப்பானும்இணைந்து கையெழுத்திட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவு ஒரு தலைப்பட்சமானது. இந்த முனையம் தொடர்ந்து முழுமையாக இலங்கை துறைமுக அதிகார சபையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளமை வருந்தத்தக்கது எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (நி-4)

# இரு சமூகங்களையும் ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழியே இப்போராட்டம்

## அமீர் அலி தெரிவிப்பு

(கொழும்பு)

பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்டு பொலிகண்டி வரையான இந்தப் போராட்டம் நீதி வேண்டி நடத்தப்படுகின்ற ஒரு போராட்டமே என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக இடம்பெறும் அடக்கு முறைகளை எதிர்த்து நடைபெறும் பேரணி நேற்று முன்தினம் ஓட்டமாவடியை வந்தடைந்தவேளை அப்போராட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே முன்னாள் இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

இந்தப் பயணம் தமிழ், முஸ்லிம் சமூகம் எதிர்காலத்திலும் ஒற்றுமைப்பட்ட சமூகமாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை என்னிடத்தில் இருக்கிறது. அந்தவகையில், இந்த தமிழ் தலைவர்கள் மத்தியில் முஸ்லிம் தலைவர்கள் நம்பிக்கையோடு பேச வேண்டிய காலகட்டம் வந்திருக்கிறது என்பதுதான் எனது எதிர்பார்ப்பு.

எனவே, சிறுபான்மை சமூகம் ஒதுக்கப்படுகின்ற போது அதன் நிலவரத்தை இந்த நாட்டில் இருக்கின்ற ஆட்சியாளர்களுக்கு நாங்கள் துல்லியமாக பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

சிறுபான்மை சமூகத்தை இந்த நிலவரத்துக்கு ஏற்படுத்தியவர்களும் அவர்கள்தான். சிறுபான்மை மக்களை வீதிகளில் இறங்கி போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளியவர்கள் அவர்கள்தான்.

இந்த அரசாங்கத்தின் சட்ட திட்டங்கள், நிகழ்ச்சி நிரல்கள்தான் எங்களை வீதிக்கு இறங்கிப் போராட வைத்துள்ளது.

அவர்கள் நினைப்பது தான் சட்டம். அவர்கள் நினைப்பவர்களை பிடிப்பார்கள், நினைப்பவர்களை விடுதலை செய்வார்கள். அந்த அளவுக்கு இந்த நாட்டிலே சட்டம் மௌனித்துப் போயுள்ளது என அமீர் அலி தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இன்பம் எங்கே?

ஒருத்தன் இருந்தான். வாழ்க்கையிலே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான்.

அதற்கு என்ன வழி என்று நண்பர்களிடம் ஆலோசனை கேட்டான்.

"பணம் இருந்தால் மகிழ்ச்சி தானாக வரும். அதனாலே பணம் சம்பாதிக்கிற வழியைப் பார். அதன்பின்பு நீ தேடிக்கொண்டிருக்கிற மகிழ்ச்சி உன்னைத் தேடிக்கொண்டு வந்து சேரும்" என்றார்கள்.

அப்படியென்றால் மகிழ்ச்சி இருக்கிற இடம் பணம் தான் என்று முடிவு செய்தான்.

அதைச் சேர்க்க ஆரம்பித்தான். கொஞ்ச நாளிலே பெரிய ஆளாகிவிட்டான். செல்வம் நிறைய சேர்ந்து விட்டது.

இப்பவும் அவனுக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லை.

மறுபடியும் நண்பர்களிடம் யோசனை கேட்டான்.

"பணம் சேர்த்தால் மட்டும் இன்பம் வந்து விடாது. அதை செலவு செய். பணம் மூலமாக இன்பத்தைத் தேடு கிடைக்கும்" என்றார்கள்.

உடனே அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வெளிநாடுகளுக்கெல்லாம் போனான். சுற்றிப் பார்த்தான். பின்பு விருப்பமானது எல்லாம் வாங்கிச் சாப்பிட்டுப்பார்த்தான். மது, போதைப் பழக்கம் இப்படி எது எதிலேயோ ஈடுபட்டுப் பார்த்தான்.

கல்யாணம் செய்து கொண்டான். குடும்பம் நடத்தினான். எப்படி இருந்தாலும் அவன் எதிர்பார்க்கிற மகிழ்ச்சி அவனுக்குக் கிடைக்கவில்லை.

அதனாலே மகிழ்ச்சி எங்கே இருக்கிறது என்ற இரகசியத்தை அவனாலே கண்டு பிடிக்கவே முடியவில்லை.

கடைசியாக ஒரு பெரியவரிடம் யோசனை கேட்டான். அவர் சொன்னார்..."இல்லறத்திலேயும் உனக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லையென்றால் உனக்குத் துறவறத்திலே தான் அது கிடைக்கும் என்று நினைக்கிறேன்" என்றார்.

"சரி அதையும் தான் முயற்சி செய்து பார்ப்போமே" என்று முடிவு செய்தான்.

துறவறம் என்றால் சும்மாவா? எல்லாத்தையும் துறக்க வேணுமே! எல்லாவற்றுக்கும் அவன் துணிந்து விட்டான்.

வீட்டிலே இருந்த நகை, பணம், வைரம், வைடூரியம் எல்லாவற்றையும் ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டான்.

ஒரு யோகியைத் தேடிப் போனான். அவர் காலடியிலே கொண்டு போய் வைத்தான்.

அவர் நிமிர்ந்து பார்த்தார். "என்ன இதெல்லாம்?" என்றார். "இதெல்லாம் இனிமேல் எனக்குத் தேவையில்லை" என்றான்.

"சரி அப்படியென்றால் உனக்கு என்ன தேவை?" என்றார்.

"எனக்கு மகிழ்ச்சி தேவை, மன அமைதி தேவை" என்றான்.

அந்த யோகி தன் காலடியிலே இருந்த மூட்டையைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே தங்கம், வைரம், பணம் அவ்வளவுதான்.

அவசரமாக அதை சுருட்டி எடுத்துக் கொண்டார். தலையிலே வைத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தார். இவனுக்கு அதிர்ச்சி. "அடடா இந்த ஆள் போலி ஆசாமி போல இருக்கே. ஏமாந்து விட்டோமே" என்று நினைத்தான், வருத்தப்பட்டான். அந்தத் துக்கம் ஆத்திரமாக மாறியவுடன் அந்த யோகியைத் துரத்த ஆரம்பித்தான்.

அவர் ஒரே ஓட்டம். சந்து பொந்தெல்லாம் நுழைந்து ஓடுகிறார். இவனும் விடாமல் துரத்துகிறான். கடைசியாக அந்த யோகி மூச்சு இரைக்க ஒரு இடத்திலே வந்து நின்றார்.

அது அவர் புறப்பட்ட இடம். எங்கேயிருந்து ஓட ஆரம்பித்தாரோ அங்கேயே வந்து நின்றார். துரத்திக் கொண்டு வந்தவனும் ஓடி வந்து நின்றான். இப்ப அந்த யோகி சொன்னார்..."என்ன பயந்து விட்டாயா? இந்தா உன்னுடைய செல்வம். நீயே வைத்துக் கொள்" என்று மூட்டையைத் திருப்பிக் கொடுத்தார். கைவிட்டுப் போன தங்கமும் வைரமும் பணமும் திரும்பக் கிடைத்து விட்டது என்பதிலே அவனுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

இப்ப மறுபடியும் அந்த யோகி சொல்கிறார்.

இங்கே நீ வருவதற்கு முன்னர்கூட இந்தத் தங்கமும் வைரமும் உன்னிடம் தானே இருந்தது. ஆனால் அப்போ உனக்கு மகிழ்ச்சி இல்லை. இப்ப உன்னிடம் இருக்கிறதும் அதே தங்கமும் வைரமும் தான். ஆனால் இப்ப உன் மனதிலே மகிழ்ச்சி இருக்கிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? மகிழ்ச்சி என்பது வெளியிலே இல்லை. உள்ளே இருக்கிறது. அது நம்ம மனதிலே இருக்கிறது. இதை நல்லா புரிந்து கொள்ள வேண்டும்.தங்கத்தையும் வைரத்தையும் மூட்டை கட்டி தலையில் வைத்துக்கொண்டு அலைந்தானே அவன் மாதிரியே நம்மிடம் உள்ள பலபேருக்கும் மகிழ்ச்சி எங்கே இருக்கிறது என்கின்ற உண்மை புரிவதில்லை. அதனாலேதான் பல சமயங்களிலே நம்ம மகிழ்ச்சிக்காக அடுத்தவர்களைச் சார்ந்து இருக்கிறோம்.

நம்ம ஆள் ஒருத்தன். பணம், நகை எல்லாத்தையும் ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு வந்து ஒருத்தர் காலடியிலே வைத்தான். "இது எனக்குத் தேவையில்லை" என்றான்.

"உனக்கு என்னதான் தேவை?" என்றார் அவர்.

"உனக்கு மன அமைதி தேவைப்படுகிற அளவுக்கு இப்ப என்ன ஆகி விட்டது?" என்றார் அவர். "வேறு ஒன்றுமில்லை. இந்த பணத்தையும் நகைகளையும் நான் யார் வீட்டிலே எடுத்தேனோ அந்த வீட்டுக்காரர்கள் இப்ப என் பின்னால் துரத்திப் கொண்டு வருகிறார்கள் அவ்வளவு தான்" என்றான்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

18

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| உள்ளூராட்சிச் சபைகள் 2002-2006 அட்டவணை-9 | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | A | B | மாவட்டம் | A | B |
| கொழும்பு | 12 | 13 | மன்னார் | 4 | 5 |
| கம்பஹா | 19 | 19 | மட்டக்களப்பு | 12 | 12 |
| களுத்துறை | 14 | 16 | அம்பாறை | 16 | 18 |
| கண்டி | 22 | 22 | திருகோணமலை | 11 | 13 |
| மாத்தளை | 12 | 12 | அநுராதபுரம் | 19 | 19 |
| நுவரெலியா | 8 | 8 | பொலநறுவை | 6 | 7 |
| காலி | 18 | 20 | குருநாகல் | 20 | 20 |
| மாத்தறை | 14 | 17 | புத்தளம் | 12 | 12 |
| அம்பாந்தோட்டை | 11 | 12 | பதுளை | 17 | 17 |
| யாழ்ப்பாணம் | 16 | 17 | மொனராகலை | 10 | 10 |
| கிளிநொச்சி | 3 | 3 | இரத்தினபுரி | 15 | 17 |
| வவுனியா | 5 | 5 | கேகாலை | 11 | 12 |
| முல்லைத்தீவு | 4 | 4 | மொத்தம் | 311 | 330 |

A- 2002ம் ஆண்டு உள்ளூராட்சி சபைகள்
B- 2006ம் ஆண்டு உள்ளூராட்சி சபைகள்

புதிதாக அமைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள் உள்ளிட்ட நாட்டின் மொத்த உள்ளூராட்சிச் சபைகளின் எண்ணிக்கையான 330 சார்பாகவும் வாக்கெடுப்புக்கள் நடத்தப்படுவதற்காக 2006.01.26 ஆம் திகதி வேட்புமனுக்கள் கோரப்பட்டன. வேட்புமனு தாக்கலுக்கான காலக்கெடு 2006.02.09 ஆம் திகதி முதல் 2006.02.16 ஆம் திகதி வரை நிர்ணயிக்கப்பட்டது.

266 உள்ளூராட்சிச் சபைகள் சார்பான வாக்கெடுப்புக்கள் 2006.03.30 ஆம் திகதி நடத்தப்பட்டது. வேட்புமனுக்கள் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர்களின் தீர்மானங்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் காரணமாக 4 மாநகர சபைகள், 2 நகர சபைகள், 11 பிரதேச சபைகள் சார்பான வாக்கெடுப்புக்கள் 2006.05.20 ஆம் திகதி நடத்தப்பட்டன. முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் 2 பிரதேச சபைகளுக்கான உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்கள்.

| உள்ளூராட்சி சபைகள் தேர்தல் -2006அட்டவணை-10 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | A | B | C | மாவட்டம் | A | B | C |
| கொழும்பு | 4 | 5 | 4 | மன்னார் | - | - | - |
| கம்பஹா | 2 | 5 | 12 | மட்டக்களப்பு | - | 1 | 2 |
| களுத்துறை | - | 4 | 12 | அம்பாறை | 1 | 1 | 16 |
| கண்டி | 1 | 4 | 17 | திருகோணமலை | - | 2 | 11* |
| மாத்தளை | 1 | - | 11 | அநுராதபுரம் | 1 | - | 18 |
| நுவரெலியா | 1 | 2 | 5 | பொலநறுவை | - | - | 7 |
| காலி | 1 | 2 | 17 | குருநாகல் | 1 | 1 | 18 |
| மாத்தறை | 1 | 1 | 15 | புத்தளம் | - | 2 | 10 |
| அம்பாந்தோட்டை | - | 2 | 10 | பதுளை | 1 | 2 | 14 |
| யாழ்ப்பாணம் | - | - | - | மொனராகலை | - | - | 10 |
| கிளிநொச்சி | - | - | - | இரத்தினபுரி | 1 | 2 | 14 |
| வவுனியா | - | - | - | கேகாலை | - | 1 | 11 |
| முல்லைத்தீவு | - | - | 1* | மொத்தம் | 16 | 37 | 235 |

தேர்தலகள் நடைபெற்ற சபைகள்- 288: நடைபெறாத சபைகள்- 42
* ஒரு பிரதேசசபையின் உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர்
A- மாநகர சபை,B-நகர சபை,C- பிரதேச சபை

பாதுகாப்புக் காரணங்களினால் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38 (3) ஆம் பிரிவின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 45 உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புக்கள் 2006.09.30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்ட போதும் அவற்றில் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகர சபை, கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை, ஏறாவூர் நகர பிரதேச சபை ஆகிய 3 உள்ளூராட்சி சபைகள் சார்பாகவும் 2006.05.20 வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. எஞ்சிய 42 உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புக்கள் 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (அட்டவணை-10 ஐப்பார்க்க)

### 2007 இல் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவில்லை

2006.09.22 ஆம் திகதிய 1463/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள 42 உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புக்கள் 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22 ஆம் திகதிய 1502/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் 2008.02.09 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டதால் 2007 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புக்கள் நடத்தப்படவில்லை.

| அட்டவணை-11 மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள்-2008 | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி சபை | மொத்த உறுப்பினர்கள் | கூடிய உறுப்பினர்களைப்பெற்ற கட்சி | பெற்ற உறுப்பினர்கள் |
| மட்டக்களப்பு மா.ந.ச | 19 | ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி | 11 (54% வாக்குகள்) |
| ஏறாவூர்பற்று பி.தே.ச | 14 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 10 (64% வாக்குகள்) |
| கோறளைப்பற்று பி.தே.ச | 11 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 6 (47% வாக்குகள்) |
| கோறளைப்பற்று வடக்கு பி.தே.ச | 11 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 10 (84% வாக்குகள்) |
| மண்முனை தெற்கு எருவில்பற்று | 10 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 7 (63% வாக்குகள்) |
| மண்முனைப்பற்று பி.தே.ச | 9 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 7 (71% வாக்குகள்) |
| மண்முனை மேற்குப் பி.தே.ச | 9 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 6 (52% வாக்குகள்) |
| மண்முனை தென்மேற்குப் பி.தே.ச | 9 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 8 (81% வாக்குகள்) |
| போரதீவுப்பற்று பி.தே.ச | 9 | தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 7 (70% வாக்குகள்) |

### 2008 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன.

2006 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிய நிலவரம் காரணமாக பல உள்ளூராட்சி சபைகளுக்கு வாக்கெடுப்புக்களை நடத்துவது முடியாததொன்றாகக் காணப்பட்டது. அம்மாவட்டத்தின் மொத்த உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை 12 ஆக காணப்பட்டதோடு அவற்றுள் 9 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவிற்கமைய முதலில் 6 மாதங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து இத்தேர்தல்கள் மேலும் ஒத்தி வைக்கப்பட்டன.

2007.12.24 ஆம் திகதிய 1529/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சரினால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினூடாக, மேற்குறித்த உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனு அறிவித்தல்கள் 2008.01.04 ஆம் திகதி பிரசுரிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டது. அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரினால் அத்தினத்தில் பிரசுரிக்கப்பட்ட வேட்புமனு அறிவித்தலுக்கு இணங்க வேட்பு மனுக்கள் 2008.01.18 ஆம் திகதி முதல் 2008.01.25 ஆம் திகதி வரை கையேற்கப்படும் என நிர்ணயிக்கப்பட்டது.

இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் 2008.03.10 ஆம் திகதி நடத்தப்பட்டன. தேர்தல் முடிவுகளின் சுருக்கம் அட்டவணை-11 இல் தரப்பட்டுள்ளது. கூடிய உறுப்பினர்களைப் பெற்ற கட்சி நிர்வாகத்தை கைப்பற்றியது.

### யாழ்ப்பாணம் மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைத் தேர்தல்கள்-2009

2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களோடு தொடர்புடைய வட மாகாணத்தின் ஒவ்வோர் உள்ளூராட்சி சபை சார்பாகவும் கையேற்கப்பட்ட வேட்புமனுக்களில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்காக வாக்கெடுப்புக்களை நடத்தத்தக்கவாறு 2006 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் 2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வலுவற்றதாக்கப்பட்டன.

(தொடரும்...)

# ரவி மற்றும் அலோசியஸுக்கு பிணை



(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றம், முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேர்பெர்ச்சுவல்ட்ரசரீஸ்நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அர்ஜூன் அலோசியஸ் ஆகியோருக்கு பிணை வழங்கியது.


அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட இலஞ்ச வழக்கு தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே இந்த பிணை வழங்கப்பட்டுள்ளது. குறித்த இருவரும் தலா 5 இலட்சம் பெறுமதியான ரொக்கப் பிணையிலும் தலா 50 இலட்சம் பெறுமதியான சரீர பிணையிலும் செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் பேசுபொருளான மொனார்க் தொடர்மாடி சொகுசு குடியிருப்பை மையப்படுத்தி இலஞ்ச ஊழல் விசா



ரணை சட்டத்தின் 19 (உ) பிரிவின் கீழ் முதலாம், 2 ஆம் பிரதிவாதிகளாக முறையே ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜூன அலோசியஸ் ஆகியோர் பெயரிடப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## மந்திரங்களின் மகிமை

*(தொடர்ச்சி)*

*"வாழ்க வளமுடன்" என்று சொல்வது கூட மிகவும் சக்தி வாய்ந்த ஒரு மந்திரமாகக் கருதப்படுகிறது. திருமந்திரம், பெரியபுராணம், கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம் ஆகியவற்றில் உள்ள பாடல்கள் சக்தி வாய்ந்தவை.*

*பன்னிரு திருமுறைகளில் சகல காரிய சித்தியளிக்கும் மந்திரங்கள் ஏராளமாகப் புதைந்து கிடப்பதைக் காணலாம்.*

*செல்வம் வேண்டுமா? உடனே திருமணம் நடைபெற வேண்டுமா? கடன் பிரச்சினை தீர வேண்டுமா? நோய்கள் தீர வேண்டுமா? ஏழ்மையில் இருந்து விடுபட வேண்டுமா? எல்லாவற்றுக்கும் தமிழ் வேத மந்திரங்கள் உள்ளன.*

*காலையில் படுக்கையில் இருந்து எழும் போதே "சிவ...சிவ" என்று சொல்லிக் கொண்டே எழுந்திருக்கலாம். அல்லது உங்களுக்குப் பிடித்த சாமி பெயரைச் சொல்லலாம்.*

*தீராத வியாதிகளால் அவதிப்படுபவர்கள் ஆலய சந்நிதியில் அமர்ந்து திருநீலகண்டப் பதிகத்தின் முதல் திருமுறையைப் பாட நோய் பஞ்சாகப் பறந்து விடும். சிலருக்கு சனிக்கிரக பாதிப்பு மிகக் கடுமையாக இருக்கும்.*

*அத்தகைய பாதிப்புக்குள்ளானவர்கள் திருஞானசம்பந்தர் திருநள்ளாறில் பாடிய பதிகத்தை 108 தடவை பாராயணம் செய்தால் பயன் அடையலாம்.*

*அதுபோல திருஞான சம்பந்தர் திருநெடுங்குளம் எனும் தலத்தில் பாடிய பதிகத்தைப் பாடினால் எவ்வளவு பெரிய தடைகளும் உடைபட்டு விலகி ஓடி விடும்.*

*திருச்சோற்றுத்துறை எனும் தலத்தில் திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடினார். அந்தப் பதிகத்தை ஜெபித்தால் வசதியான வாழ்வைப் பெற முடியும்.*

*அதுபோல அவர் திருமருகல் எனும் தலத்தில் பாடிய பதிகத்தை ஆலய பிரகாரத்தில் அமர்ந்து படித்தால் உடனே திருமணம் கைகூடி விடும்.*

*இப்படி நோய்கள் நீங்கவும் கிரக தோஷங்கள் விலகவும் பதிகங்களும் மந்திரங்களும் நிறைய உள்ளன. அவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு ஜெபித்தால் நிச்சயமாக உரிய பலன்கள் கிடைக்கும். பதிகங்களைப் படிப்பதால் எப்படி பலன் கிடைக்கும் என்று சிலருக்குச் சந்தேகம் எழக்கூடும்.*

*மந்திரங்கள், பதிகங்களில் உள்ள ஒவ்வொரு சொற்களும் சித்தர்கள், ஆழ்வார்கள் நாயன்மார்களால் சக்தி வாய்ந்த அதிர்வைப் பெற்றுள்ளன. இந்த அதிர்வுகள் ஒலி சக்திகளாகும். இந்த அதிர்வுகள் ஒன்றுசேரும் போது சக்தி பல மடங்கு அதிகரித்து நமக்குப் பலனைப் பெற்றுத் தரும்.*

*நோய் தீர்க்கும் தன்வந்த்ரி ஸ்லோகத்தை 27 தடவை சொன்னால் இத்தகைய பலன்களைப் பெற முடியும். ஆதிசங்கரர் சவுந்தர்ய லஹரியில் கூறியுள்ள ஒரு மந்திரப் பாடலைப் பாடினால் எவ்வளவு பெரிய காய்ச்சலும் உடனே நீங்கி விடும்.*

*ஆஞ்சநேயர் சந்நிதியில் வழிபடும் போது ஆஞ்சநேயர் மந்திரத்தைக் கூறினால் கொடிய நோய்கள் குணமாகும். அதுபோல அனுமன் கவசத்தை ஜெபித்தால் சுறுசுறுப்பாக இருக்கலாம்.*

*அம்பாள் சந்நிதியில் வழிபடும்போது "ரோக நிவாரண அஷ்டகத்தை" சொல்லலாம். மந்திரங்கள், பதிகங்களைப் படிக்கும் போதோ சொல்லும் போதோ வாய் விட்டு சொல்வதை விட மனதுக்குள் சொல்வது நல்லது.*

*நமது புராணங்கள், இதிகாசங்கள், வேதங்கள், உபநிடதங்களில் ஏராளமான மந்திரங்கள் உள்ளன. திருமந்திரம், கந்தர் அனுபூதி, கந்தசஷ்டி கவசம் போன்றவற்றில் மந்திரங்கள் மறைந்து கிடக்கின்றன.* *(தொடரும்)*

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 16 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் கொவிட் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 2,997 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## வலுக்கட்டாயமாக கோழிகளை எடுத்துச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

(கொழும்பு)

கொழும்பில் ஒரு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், கோழிப் பண்ணையிலிருந்து வலுக்கட்டாயமாக இரு கோழிகளை எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் வீரவில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திஸ்ஸமஹராம, கங்காசிறிபுரவில் உள்ள கோழிப் பண்னை உரிமையாளரிடமிருந்து வந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை திஸ்ஸமஹராம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 100,00C ரூபாய் சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 420 | 400 |
| உருளைக்கிழங்கு | 120 | 125 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 | 900 |
| தக்காளி | 240 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 200 | 240 | 240 | 280 |
| பூசணி | 140 | 160 | 130 | 160 |
| புடோல் | 220 | 220 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 280 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 220 | 240 | 350 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 160 |
| பீற்றூட் | 260 | 250 | 140 | 300 |
| கறிமிளகாய் | 350 | 400 | 350 | 450 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 160 | 180 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 400 | 380 | -- | 350 |
| கீரை – 1 பிடி | 100 | 90 | 40 | 80 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 100 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 220 | 280 | 320 |
| முள்ளங்கி | 120 | 100 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 130 | 120 | 60 | 80 |




# வீண் பேச்சால் வந்த விபரீதம்



விஷம் கலந்த உணவு என்று தெரிந்திருந்தால், அந்தணருக்கு கொடுத்திருக்க மாட்டான். அவன் உணவில் விஷம் கலந்து தெரியாமல் தானே அதை அந்தணனுக்கு வழங்கினான். அப்படியானால் அந்தப் பாவம் மன்னனையும் சேராது.

குழம்பிப் போன சித்திரகுப்தன் எமதர்மனிடம் சென்று தன் சந்தேகத்தை கேட்டான். எமதர்மனும் கொஞ்சம் யோசனையில் ஆழ்ந்தான். அதன் பின் "சித்திரகுப்தா இதைப் பற்றி நீ பெரிதாக எண்ணாதே ! இந்தக் கர்ம வினையின் தண்டனையை யாருக்கு வழங்கவேண்டுமென்று சிறிது காலத்தில் தானாகவே தெரிய வரும்" என்றான். சரி என்று சித்திரகுப்தனும் திரும்பினான்.

கொஞ்ச நாட்கள் கழித்து. மன்னனின் பெருமையை அறிந்து, ஐந்து அந்தணர்கள் அரண்மனையைத் தேடி வந்து கொண்டிருந்தனர். வழி தெரியாமல் தேடிக் கொண்டிருந்த அவர்கள், அருகில் பானை விற்றுக் கொண்டிருந்த பெண்மணியிடம் அரண்மனைக்கு செல்லும் வழியைக் கேட்டனர். அந்தப் பெண்ணும் சரியான வழியை காட்டினாள்.


அத்துடன் விட்டிருந்தால் பரவாயில்லை. அந்த அந்தணர்களிடம் "கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்கள். இந்த மன்னன் அந்தணர்களை சாகடிப்பது போலத் தெரிகிறது" என்று சொன்னாள். அந்தக் காட்சியைக் கண்ட சித்திரகுப்தன் தன் சந்தேகத்துக்கு விடை கிடைத்து விட்டதென்று மகிழ்ந்து அந்த பானை விற்கும் பெண் மேல் அந்தக் கர்மவினையை ஏற்றி விட்டான்.

இப்படி தான் யாருக்காவது உதவி செய்கிறோம் பேர்வழி என்று நாம் அறியாத ஒருத்தரைப் பற்றி, புறம் பேசுகிறோம். நமக்குத் தெரியாத விடயங்களில் தலையிடுவது தவறு. நமக்கு சம்பந்தம் இல்லாத ஒருவரைப் பற்றி, நமக்கு துன்பம் இழைக்காதவரைப் பற்றி, சரியான உண்மையை அறியாமல் இன்னொருவரிடம் புறம் பேசுவதால் வந்த வினை இது. இதைத் தான் கர்ம வினை என்கிறோம். நாம் பேசும் சொற்களுக்கு நமது நாக்கு தான் எஜமானி. அதனால் நாம் உச்சரிக்கும் வார்த்தைகளை ரொம்ப கவனமாக யோசித்து பேசவேண்டும்.

யாருக்கும் பயன்தராத வார்த்தைகளைப் பேசுவதை விட மௌனமாக இருப்பதே சிறந்தது என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். அதனால், ஒவ்வொரு வார்த்தையையும் யோசித்து பேசுங்கள்! (முற்றும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## பிரமிக்க வைத்த போரஸ்




கி.மு. 326 ஜூலை மாதம். ஜீலம் மற்றும் சினாப் நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியை புருஷோத்தமர் என்கிற மன்னர் ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

போரஸ் என்பது அவருடைய இன்னொரு பெயர். தற்போது பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணமாக இருக்கும் பகுதிதான் அன்று புருஷோத்தமரின் ஆளுகையில் இருந்தது.

மிகச்சிறந்த வீரர். யானைப் படையை வெற்றிகரமாகச் செலுத்தி வெற்றிகளைக் குவிப்பதில் சூரர்.

எவ்வளவு பெரிய எதிரியாக இருந்தாலும் தீரத்துடன் களத்தில் எதிர்கொள்ளக்கூடியவர் புருஷோத்தமர் என்று ஏற்கனவே அரசியல் வல்லுநர் ஒருவர் அலெக்சாண்டருக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

தன்னுடைய அரசியல் வல்லுநர் இப்போது தான் முதன்முறையாக ஒரு வீரனைப் பற்றிப் பேசியதால் போரஸைச் சந்தித்துப் போரிடுவதற்கு ஆர்வமாக இருந்தார் அலெக்சாண்டர்.

இலக்குகள் முக்கியம் தான். வெற்றிகள் முக்கியம்தான். ஆனால் உழைப்பைச் செலுத்தி வரக் கூடிய உன்னதமான வெற்றிகள் அவசியம்.

மனதுக்குச் சந்தோசம் வேண்டும் என்றால் சவாலான வெற்றிகள் அவசியம். வெற்றி வெற்றிகள் தேவையில்லை. சவால் நிறைந்த வெற்றிகளையே நான் நேசிக்கின்றேன்.

அலெக்சாண்டர் பேசப் பேச அரசியல் வல்லுநருக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனடியாகச் சரணடைய வேண்டும். இல்லாவிட்டால் போர்க்களத்தில் சந்திக்க வேண்டும். எச்சரிக்கை. இதுதான் அலெக்சாண்டர் தன்னுடைய தூதுவனிடம் உதிர்த்த வார்த்தைகள். அப்படியே கொண்டு போய் போரஸிடம் சேர்த்தார் அந்தத் தூதுவர்.

விடயத்தைக் கேட்டு அவையில் இருந்தவர்கள் எல்லோரும் கொதித்துப் போய்விட்டனர். அலெக்சாண்டர் பெரிய வீரனாக இருக்கலாம். ஆனால் மன்னர் போரஸின் படைபலம் தெரியாமல் சிறுபிள்ளைத்தனமாக மிரட்டல் விடுத்து அனுப்பியிருக்கிறாரோ.

ஒருவேளை அபரிமிதமான வெற்றியால் மதி மயங்கிவிட்டதா? என்ன ஆயிற்று அலெக்சாண்டருக்கு? ஆத்திரப்பட்டனர் அமைச்சர்கள்.

(தொடரும்)

கோமானது உத்தமனிடத்தில் கணப்போதும், மத்தி மனிடத்தில் இரண்டு நாழிகைப்போதும், அதமனி டத்தில் ஓர் இரவும் பகலும், பாவியிடத்தில் மரண காலம் வரையும் தங்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி கோட்டாபயவை பாராட்ட வேண்டும்

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் என இந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 73ஆவது சுதந்திர தின நிகழ்வில் ஆற்றிய உரையில் பகிரங்கமாகத் தெரிவித் துள்ளார்.

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் என்று அவர் பகிரங்கமாகக் கூறியதைப் பாராட்ட வேண்டும்.

ஏனெனில், அவர் தான் யார் என்பதை மறைப்புச் செய்யவில்லை. அல்லது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று நடிக்கவில்லை.

நான் பௌத்த சிங்களத் தலைவன். எனவே ஏனைய சிறுபான்மை இனங்கள் பற்றி எனக்கு எந்தக் கருசனையும் கிடையாது என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் மிகத் தெளிவாக – பகிரங்கமாக கூறியுள்ளார்.

அதிலும் அடுத்த மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை விவகாரம் அங்கு விவாதிக்கப்படவுள்ள நேரத் தில், நான் பௌத்த சிங்களத் தலைவன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறி யுள்ளார் எனில்,

அதற்குள் ஐ.நா மட்டுமல்ல எந்தக் கொம்ப னாலும் என்னை எதுவும் செய்ய முடியாது என்பதை அவர் தெட்டத்தெளிவாகக் கூறி யுள்ளார்.

இதற்கு மேலாக, நான் பௌத்த சிங்களத் தலைவன் என்று ஜனாதிபதி கூறியதற்குள், நான் பௌத்த மதத்தையே பின்பற்றுவேன். ஏனைய சமயங்கள் பற்றி எனக்கு எந்த அக்கறையும் கிடையாது.

தவிர, நான் ஒரு சிங்களவர் என்ற நினைப் பிலேயே எனது ஆட்சித் தலைமை இருக்கும்.

இங்கு சிறுபான்மை மக்கள் பற்றிய கவ னிப்புகள் எதுவும் தேவையற்றவை என்ற பொருளும் அவரின் உரைக்குள் உள்ளடக் கம்.

இதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் சுதந்திர தின உரை இந்தியாவை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்பதையும் மறைமுகமாக உணர்த்தியுள்ளது.

ஆம், இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வந்துபோனால் என்ன? இலங்கை – இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டால் என்ன? அதுபற்றியெல்லாம் எனக்கு எந்தக் கவலையும் கிடையாது. என்னைப் பொறுத்த வரை நான் ஒரு பௌத்த சிங்களத் தலை வன். அதன் படியே இந்த நாட்டை ஆளு வேன் என்பதை ஜனாதிபதி தனது சுதந்திர தின உரையில் மிகத் தெளிவாக எடுத்துரைத் துள்ளார்.

அவரின் இந்த உரை உறுதியானதும் நிதானமானதும் என்பதில் ஐயமில்லை.

ஆக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் தான் யார் என்பதை பட்வர்த்தன மாக கூறியுள்ளார்.

இனி என்ன செய்வது என்பது பற்றி ஐ.நா வும் அமெரிக்காவும் அண்டை நாடான இந்தி யாவுமே தீர்மானிக்க வேண்டும்.

இதில் மிகப் பெரும் வெளிப்படை, அரச தரப்பில் இருக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப் பினர்களை அவர் சிஞ்சித்தும் நினைக்க வில்லை. மதிக்கவில்லை.

ஆம், இப்போதைய நிலைமை என்ன வென்று தெரிந்துவிட்டது. இனி எங்கும் பௌத்த மயம். எங்கும் சிங்கள மயம். அந்தோ சிவமயம்!

# பொது வைபவங்களில் கலந்து கொள்வதை தவிருங்கள்

# கொரோனா தொற்று முழுமையாக கட்டுப்படுத்தப்படவில்லை

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்

(கொழும்பு)

**நாட்டில் கொரோனாத் தொற்று இன்னும் கட்டுப்பாட் டிற்குள் வரவில்லை என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் கொரோனா தொற்று முற்றிலுமாக கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை சுகாதார வழிகாட் டுதல்களைத் தொடர்ந்து பின் பற்றுமாறு சுகாதாரப் பிரிவு பொதுமக்களைக் கேட்டுள் ளது.

அத்தியாவசிய தேவையி ன்றி பொது வைபவங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த் துக் கொள்ளுமாறும் அத்துடன் அத்தியாவசிய தேவை ஏற்படு மானால் சரியான சுகாதார வழிகாட்டிகளைப் பின்பற்றி வைபவங்களுக்குச் சென்று உடனடியாகத் திரும்புமாறு பொதுமக்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத்தடுப்பூசிகளைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

# மக்கள் போராட்டம் வெற்றியளித்துள்ளது

## நிச்சயமாக தீர்வு கிடைக்கும்-ஜீவன் நம்பிக்கை

(ஹற்றன்)

முயற்சி செய்யாமல் எதுவும் கிடைக்காது எனவும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் மூலம் மக்கள் தமது ஒற்று மையை வெளிப்படுத்தியுள்ள னர் என்றும் இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச் சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எனவே, நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் சம்பள உயர்வு தொடர்பாக சாதகமான முடிவு கிடைக்கும் என நம்பு வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலையகத்தில் மட்டுமல் லாது கொழும்பிலுள்ள வர்த்தகர் களும் ஆதரவை நல்கியுள்ள னர். எட்டு சர்வதேச நாடுகளும் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தன.

மக்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்ற நினைப்பிலேயே கம்பனிகள் செயற்பட்டு வந்தன. இன்று தொழிலாளர்களின் ஒற் றுமை, பலம் என்பன காண் பிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பொதுவான விடயம், நியாயமாக இருந்தால் இணைந்து போராடுவதற்குத் தயார் என்ற தகவலையும் மக் கள் வழங்கியுள்ளனர் என ஜீவன் தெரிவித்தார். (நி-4)

# நீதிக்கான போராட்டத்திற்கு ஆதரவு

### அரசியல் கைதிகளின் விடுதலைக்கான இயக்கம்

(கொழும்பு)


தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத் துவதோடு பல்வேறு விவகாரங்கள் தொடர்பிலும் நீதி வழங்குமாறு வலியுறுத்தி நடத்தப்பட்டுவரும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணிக்கு ஆதரவு வழங்குவதாக அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் அறிவித்துள்ளார். (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்க ளின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத் தில்** இணுவில் கந்த சாமி கோவில், இணு வில் மேற்கு, பாலா வோடை, பத்தனை, தாவடி மானிப்பாய் வீதி, தாவடி இந்துமயா னம் ஆகிய பிரதேசங் களிலும், மின் தடைப்ப டும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## மனதை கையாளப் பயிற்சி

❖ இளமையும், வலிமையும், வளமையும், அறிவுக் கூர்மையும் உடை யவர்களே இறைவனை அடையக் கூடியவர்கள்.

❖ நீங்கள் கடவுளின் குழந்தைகள், அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள், புனிதமும், பூரணத்துவமும் பெற்றவர்கள்.

❖ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றி யமையாதவை. அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

❖ நீ வலிமை உள்ளவனாக இருந்தால், நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

❖ அன்றைய தினம் மலர்ந்ததும், பிறரால் தொடப்படாததும், நுகரப்படாததுமான புத்தம் புதிய மலர்களே இறைவனின் பாதகமலங்களில் இடுதற்குரிய தகுதி பெற்றவை, இறைவனும் அவற்றையே விரும்பிப் பெற்று ஏற்கிறான்.

❖ சிந்தனையின் ஆற்றல் தொண்ணூறு சதம் சாதாரண மனிதனால் வீணாக்கப்படுகிறது. எனவே அவன் தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறான். சரியான பயிற்சியைப் பெற்றவனோ தவறு செய்வதில்லை.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—229

# கொரோனாவினாலான அனுகூலங்களும் பழங்களின் முக்கியத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

2021ஆம் வருடம் அனைவரும் எதிர்பார்த்திராத வருடமாகவே வந்திருக்கின்றது. கடந்த வருடம் கொரோனா வைரஸினது ஆரம்பப்புள்ளியாக இருந்தமையினால்அனைவரையும் சகஜ வாழ்க்கையில் விரும்பியோ விரும்பாமலோ அனைத்து நடவடிக்கைகளிலும் மாற்றங்களை விரைந்து ஏற்படுத்த வைத்திருக்கின்றது என்றால் மிகையாகாது. இதன் மூலம் பல அருமையான மாறுதல்களையும் அது ஏற்படுத்தியிருக்கின்றது என்பதனை அவதானிக்க முடிகின்றது. பாதிப்பாக இருந்தாலும் அதிலும் பல நன்மைகள் பின் விளைவாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் விவசாயத்தின் முக்கியத்துவத்தை உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என்னும் கருப்பொருளை ஒவ்வொரு குடும்பமும் அதியுச்சமாக உணர வைத்திருக்கின்றது.

எந்தத் திறனுள்ள அனுபவ நடைமுறையையும்கொரோனா என்னும் கண்ணுக்குத் தெரியாதவைரஸ்உடைத்தும்அதன் ஆழத்தை அறிவால், அனுபவத்தால் உணர்த்தி உணர்வுபூர்வமாக ஒவ்வொருவரையும் அனுபவித்துப் பார்க்க வைத்திருக்கின்றது. எந்த நிர்வாகத் திறமையினாலும் செய்ய முடியாத பல விடயங்களை அசைத்துப் பார்த்திருக்கும் அதேவேளையில் புதுமைகளுக்கானகளத்தைஅனைத்து விடயங்களிலும் திறந்து வைத்திருக்கின்றது என்றே கூறவேண்டும். எது சாத்தியமோ அதனை சாத்தியமற்றதாகவும் எது முடியாதென்று நினைத்திருந்தோமோ அதனை விரும்பியோ விரும்பாமலோ செய்யத் தூண்டியதால் உலகில் பல மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை ஆக்கபூர்வமானதாக நாம் உணரத் தலைப்பட வேண்டும். இந்த மாற்றங்களுக்கான அடிப்படை இன்னும் நின்றாகவில்லை. பொருளாதாரத்தில் அறிவால் வல்லமையான நாடுகளை உலுப்பிப் பார்த்திருக்கின்றது என்றால் வளர்முக நாடுகள் எம்மாத்திரம். இருப்பினும் அனைத்து நாடுகளுக்கும் இந்தத் தாக்கம் நன்மைகளைத் தரும் மாற்றங்களாக மாற்றமடைந்திருக்கின்றது.

கொரோனா வைரஸின் தாக்கத்திற்குப் பயந்து பல கொடுக்கல்-வாங்கல்கள், பல்துறை சார் சந்தைப்படுத்தல்கள், உற்பத்திப்பொருட்களுக்கான தெரிவு, இன்னும் சூழல் மற்றும் கால நிலை மாற்றத்தின் அனுகூலம் என்பன பரவலாக உணரப்பட்டிருக்கும் அதேவேளையில் உலகம் தற்போது அதனது தாக்கத்தின் மத்தியிலும் வைரஸினைப் புறந்தள்ளாது அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் திட்டமிடல்களை ஊக்குவித்திருக்கின்றது. கல்வியில் ஏற்பட்ட மாற்றம் மிகப்பெரியது. நேரடிக்கல்வியிலிருந்து இலத்திரனியல் இணையவழி கல்வியை அனைத்து மட்டங்களிலும் உணர வைத்திருக்கின்றது. இவ்வேளையில் எதிர்கால மாற்றங்களுக்கு தாக்குப்பிடித்து வளரக்கூடியதும் அதிகளவிலான உற்பத்தியைத் தரக்கூடியதான பயிர்களை குறிப்பாக பழவகைகளை இனங்கண்டு வளர்த்து பயன்பெற வழிவகை செய்தல் வேண்டும். கொரோனாவினால் ஆரம்பத்தில் அதிகம் அதற்குப் பழக்கப்படாதிருந்தமையால் உலகமே திணறியிருந்ததனை அனைவரும்உணர்ந்திருக்கின்றோம். மெல்ல அதனது தன்மையையும் அதனால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களையும் எம்மை காப்பாற்றிக் கொள்ளும் அறிவையும் ஊட்டி அனுபவத்தால் ஆழ்ந்தறிந்து பார்க்க வைத்திருக்கின்றது.


எதனையும் ஏதோவொரு முன்னெச்சரிக்கையாகவே எடுத்துப் பார்க்க வைத்திருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் புதுமைகளை கண்டுபிடிக்க அறைகூவலையும் விடுத்திருக்கின்றது. இந்த மாற்றம் குறிப்பாக இளையவர்களிடம் அவசியம் உணரப்படல் வேண்டும்.

விவசாயத்தில் விரைந்து மாற்றங்களை செய்யவேண்டிய காலத்திற்குள் நுழைந்திருக்கின்றோம் என்றே கூறலாம். பல விடயங்களை ஆராய்ந்து அவற்றின் பயன்பாடுகளை அவசியம் கருதி உணர்த்தியிருக்கின்றது. அதிலொரு விடயமாக பழவகைகளின் உற்பத்தியை அதிகரிப்பதாகும். உலக உணவு மற்றும் விவசாய தாபனத்தின் பிரகடனத்தின் படி இந்த ஆண்டினை உலக பழவகைகளுக்கான மற்றும் மரக்கறிப்பயிர்களுக்கான ஆண்டாக அறிவித்திருப்பது அந்த நோக்கத்தினை மையப்படுத்தியதாகவே கருதலாம்.

பழப்பயிர்களுக்கான உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியிருப்பதன் மூலம் மக்களுக்கு தேவையான ஊட்டச்சத்தினை பழங்களிலிருந்து பெற வழி வகுத்திருக்கின்றது. நம்நாட்டு பழவகைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் அதிலிருந்து மக்களுக்குத் தேவையான ஊட்டச்சத்தை இலகு வழியில் மலிவானதாக கிடைக்கச் செய்தலுமே இதனது எதிர்பார்ப்பாகும்.

நம்நாட்டில் இவ்வகையான பழப்பயிர்கள் பல அதிகம் நுகரப்படாததாகவே இருக்கின்றன. இறுதியாகக் கிடைத்த தகவலின் படி இனங்காணப்பட்டவைகளுள் வில்வம் **(Aegle marmelos)**, விளா **(Limonia acidissima)**, அன்னமுன்னா **(Annona muricata)** மற்றும் புளி **(Tamarindus indica)** ஆகியனவாகும். ஆனால் இவற்றையும் விட மேலும் பல பழவகைகள் நம்மூரிலே காணப்படுகின்ற போதிலும் அவற்றை நாம் அதிகளவில் பயன்படுத்துவதில்லை. குறிப்பாக அவற்றில் கிடைக்கும் தன்மை மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே காணப்படுகின்றன. நீரிழிவுக்கு உகந்த ஜம்பு, விற்றமின் "சி" இனை அதிகம் கொண்ட நெல்லி (சிறு நெல்லி மற்றும் பெருநெல்லி) என்பனவற்றையும் இங்கே குறிப்பிடலாம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 312




இவற்றைவிட வழமையான பழங்களைக் கூட அதிகமாக விலைகுறைந்தளவில் பெறமுடியவில்லை என்னும் குற்றச்சாட்டும் பலரிடமிருந்து வெளிக்கிளம்புவதனை அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்து கறுத்தக்கொழும்பான், வெள்ளைக்கொழும்பான், விளாட்டு, இன்னும் பல வகைகள் அருகிக்கொண்டு போவதனைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

வாழையிலும் பழத்தின் அளவு அளவுக்கதிகமாக போய்க் கொண்டிருப்பதனையும் கூறுகின்றனர். வாழையின் பழத்தின் அளவு அளவாக இருந்தால் தான் ஒருவருக்கான ஒருநேர உணவாக அதனைக் கொள்ளலாம். அதிகமானதாக இருந்தால் அளவுக்கதிகமாக உட்கொள்வதாக அமைந்துவிடும். பலா மரத்தில் இங்குள்ள இனங்களில் பலவற்றை நாம் இழந்ததாக காண முடிகின்றது. பலவற்றில் முந்தியிருந்த சுவை அருகிக் கொண்டே போவதனையும் அவதானித்துள்ளார்கள். இவற்றையெல்லாம் ஒன்று சேரப்பார்த்தால் எமக்குரியதாக இருக்கின்ற பழவகைகளை நாம் அந்த இனங்கள் மாறி விடாமல் பாதுகாக்கின்ற அதேவேளையில் அவற்றிலிருந்து அதிகரித்தளவில் பழங்களைப் பெறவும் வழிசெய்தல் வேண்டும்.

பழங்களிலும் மரக்கறிகளிலும் அதிகளவில் அன்ரிஒக்சிடென்கள் **(Antioxidents)** அதிகளவில் இருப்பதனால் அவற்றை எமது உணவில் அதிகமாக உள்வாங்கிக் கொள்வது எமது உடலை தேகாரோக்கியம்மிக்கதாக வைத்திருப்பதற்கு உதவும். வாழைப்பழத்திலும் அதிகளவு அன்ரிஒக்சிடென்கள் உண்டு. ஆதலால் தினமொரு வாழைப்பழம் உடலுக்கு என்றுமே நல்லது.

எமது நாட்டில் எமது உடலில் எதிர்ப்பு சக்தியை எமது உணவாலும் எமது பழக்க வழக்கங்களினாலும் நாம் பேணிப் பாதுகாப்பதனால் கொரோனா போன்ற வைரஸ்க்களின் தாக்கம் அதிகமாக உணரப்படவில்லை என்பதனை மறுப்பதற்கில்லை. ஆதலினால் எமது உடலுக்கு தேவையான ஊட்டச்சத்தினை நாம் உணவில் சேர்த்துக் கொள்ள மறந்துவிடக்கூடாது. அவசரமான உலகில் அவசரமாக உணவை சுருக்கி உட்கொண்டு அவசரமாகவே போய்ச்சேர்ந்துவிட முயலக் கூடாது. இயற்கைவழி வாழ்ந்து வளமான எதிர்கால சந்ததியை உருவாக்கவும்அதனை நோயெதிர்ப்பு சந்ததியாகவே வளமாக்கவும் நாம் முயன்றிடுவோம்.

## வடக்கில் 8...

த்துவபீட ஆய்வுகூடங்களில் நேற்று வெள்ளிக்கிழமை 687 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதாகவும்,

அவர்களில் வட மாகாணத்தில் எட்டுப் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில் மன்னார் மாவட்டத்தில் ஏழு பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும்யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம-3,18)

## 27 அத்தியாவசிய...

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

லங்கா சதொச, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள், கியு-ஷொப் விற்பனையகங்கள் ஊடாக குறித்த நிவாரண விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

சிகப்பு அரிசி 1 கிலோ : புதிய விலை 93 ரூபாய் தற்போதைய விலை 106 ரூபாய்

வெள்ளை பச்சரிசி 1 கிலோ : புதிய விலை 93 ரூபாய். தற்போதைய விலை 105 ரூபாய்.

நாட்டரிசி 1 கிலோ : புதிய விலை 96 ரூபாய். தற்போதைய விலை 109 ரூபாய்

சம்பா 1 கிலோ: புதிய விலை 99 ரூபாய். தற்போதைய விலை 120 ரூபாய்

கீரி சம்பா 1 கிலோ : புதிய விலை 125 ரூபாய். தற்போதைய விலை 140 ரூபாய்.

கோதுமை மா 1 கிலோ : புதிய விலை 84 ரூபாய் தற்போதைய விலை 105 ரூபாய்.

வெள்ளை சீனி 1 கிலோ : புதிய விலை 99 ரூபாய். தற்போதைய விலை 110 ரூபாய்.

சிகப்பு சீனி 1 கிலோ : புதிய விலை 125 ரூபாய். தற்போதைய விலை 140 ரூபாய்.

தேயிலை 100 கிராம் : புதிய விலை 95 ரூபாய். தற்போதைய விலை 130 ரூபாய்.

பருப்பு அவுஸ்திரேலியா 1 கிலோ : புதிய விலை 165 ரூபாய். தற்போதைய விலை 188 ரூபாய்.

பெரிய வெங்காயம் இந்தியா 1 கிலோ : புதிய விலை 120 ரூபாய். தற்போதைய விலை 140 ரூபாய்.

உருளைக்கிழங்கு உள்நாடு 1 கிலோ : புதிய விலை 180 ரூபாய். தற்போதைய விலை (216 - 220) ரூபாய்.

உருளைக்கிழங்கு பாகிஸ்தான் 1 கிலோ : புதிய விலை 190 ரூபாய். தற்போதைய விலை 140 ரூபாய்.

கடலை 1 கிலோ : புதிய விலை 225 ரூபாய். தற்போதைய விலை 175 ரூபாய்.

ரின் மீன் உள்நாடு 425கிராம் : புதிய விலை 220 ரூபாய். தற்போதைய விலை 240 ரூபாய்.

நெத்தலி தாய்லாந்து 1 கிலோ : புதிய விலை 545 ரூபாய். தற்போதைய விலை 700 ரூபாய்.

தோலுடன் கூடிய கோழி 1 கிலோ : புதிய விலை 400 ரூபாய். தற்போதைய விலை 430 ரூபாய்.

கட்டி உப்பு 1 கிலோ : புதிய விலை 43 ரூபாய். தற்போதைய விலை 55 ரூபாய்,

பால்மா 400 கிராம் : புதிய விலை 355 ரூபாய். தற்போதைய விலை 380 ரூபாய்.

சோயா எண்ணை 500மி.லீ : புதிய விலை 310 ரூபாய். தற்போதைய விலை 470 ரூபாய். (ம-3)

## நீதிக்கான...

ணிக்கும் வீதிகளில் ஆணிகள் எறியப்பட்டு, அதில் வாகனங்களின் ரயர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சிவில் சமூக பிரதிநிதிகள் பயணித்த வாகனம் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாண்க்கியன் பயணித்த வாகனம் மேலும் சில வாகனங்களின் ரயர்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது.

புல்மோட்டையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்து கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பேரணி வீதியில் சென்று கொண்டிருந்தபோது பெருமளவு ஆணிகள் போடப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டதையடுத்து அவை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

மேலும் சில வாகனங்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ம-3)

## 4 பேர்...

தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 4 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 343 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் +729 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## குடும்பஸ்தர்...

நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த சதாசிவம் நந்தகுமார் (வயது-48) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்தவராவார்.

அவர் கடந்த முதலாம் திகதி வெளியில் சென்றிருந்ததாகவும் பின்னர் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அன்றைய தினமே சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலைக்குச் சென்று மரண விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் நீதவான் ஏ.பீற்றர் போல், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.(ம-3,33)

## அஹிம்சை...

பேரணிகளை நடத்த பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே இந்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கோவிட் - 19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின்கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் காயத்திரி சைலவன், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடை உத்தரவும் கட்டளையும் வழங்கினார்.

பேரணியில் பங்கேற்போர் பல மாவட்டங்கள் ஊடாக அங்குள்ளவர்களையும் இணைத்து வருவதனால் கோவிட் - 19 நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் இந்த தடை உத்தரவு வழங்கப்படுகிறது என்று நீதவான் கட்டளையில் சுட்டிக் காட்டினார். (ம-3,33)

## யாழ்., மல்லாகம்...

பொதுச் சொத்துக்களிற்கு பாதிப்பில்லாத விதத்தில் ஜனநாயகரீதியில் மக்கள் நடத்தும் போராட்டங்களை தடுக்க முடியாதென்றும் பொலிஸாருக்கு குட்டு வைத்தார் மல்லாகம் நீதவான் ஆனந்தராசா.

மல்லாகம் நீதிமன்றில் மூத்த சட்டத்தரணி என்.ஶ்ரீகாந்தா உள்ளிட்ட சட்டத்தரணிகள் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையாகினர்.

சமர்ப்பணத்தை செய்த என்.ஶ்ரீகாந்தா, ஒரே நாடு ஒரே சட்டம் என அரசு சொல்கிறது. ஆனால் கொழும்பில் போராட்டங்கள், சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடக்கிறது.

இங்கே போராடுபவர்களிற்கு மட்டும் ஏன் தடை? யாழ்ப்பாணத்தில் நேற்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நூற்றுக்கணக்கானவர்கள் கூடி பேரணி செய்தார்கள். பொலிஸார் அதை தடுக்கவில்லை. இந்த போராட்டத்திற்கு மட்டும் ஏன் தடை விதிக்க முனைகிறார்கள் என கேள்வியெழுப்பினார்.

இதையடுத்து, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரியிடம், நாடு முழுவதும் பின்பற்றப்படும் சுகாதார நடைமுறை பற்றி நீதிபதி வினவினார். சுகாதார வைத்திய அதிகாரி விளக்கமளித்தார்.

இதையடுத்து, பொலிஸாரின் மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

மேலும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணிக்கு விதிக்கப்பட்ட தடையை யாழ்.நீதிமன்றம் நேற்று விலக்கிக் கொண்டுள்ளது.

சட்டத்தரணி வி.மணிவண்ணன் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு நீதிமன்றம் தடையை விலக்கிக் கொண்டுள்ளது.(ம-3,18,33,60)

## எழுச்சிப் பேரணி...

பேரணிக்கு ஆதரவளிக்க பெருமளவான பொதுமக்கள் நெடுங்கேணி சந்தி அண்மித்த வீதியோரங்களில் குவிந்தனர்.

பேரணியுடன் பல இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றனர். இவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கங்களை பொலிஸார் பதிவு செய்தனர். (ம-3,299)

## நீதிக்கான எழுச்...

ஒட்டுசுட்டான் சந்தியை அடைந்து இரவு7 மணியளவில் நெடுங்கேணியை அடைந்து அங்கிருந்து புளியங்குளம் ஊடாக 8.40 மணியளவில் வவுனியா மாவட்டத்தை அடைந்த நிலையில் போராட்டம் நிறுத்திக் கொள்ளப்பட்டது.

இன்று காலை 7.30 மணிக்கு வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து போராட்டம் மீண்டும் ஆரம்பமாகி ஏ9 வீதியூடாக மணிக்கூட்டுக்கோபுரம் வரை சென்று கடைவீதி ஊடாக நகர பள்ளிவாசல் வரை சென்று அங்கிருந்து ஹொறவப்பொத்தானை வீதி வழியாக மன்னார் வீதிக்குசென்று அங்கிருந்து மன்னார் மாவட்டம்நோக்கிபயணமாகும்.(ம-3,299)

## சிவாஜிலிங்கத்...

போதும் அஞ்சப்போவதில்லை எனவும் இந்த பேரணியை நடத்துவதற்கு எத்தகைய தடைகள் வந்தாலும் அதனை முறியடித்து பொலிகண்டி வரை நிச்சயம் முன்னேறி செல்வோம்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


மெகா பவர்
திகதி 05/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0756
W 09 16 40 67 75

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/02/05 1572 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 08 வெற்றி இலக்கங்கள் 14 29 47 55
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/02/05
சீட்டிழுப்பு இலக்கம் 4389
B 6 7 8 1 8 2
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 05.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2684
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 04 71 75 76
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.02.05
சீட்டிழுப்பு இலக்கம் - 426
G 12 27 30 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1185
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 05.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 105,325,845
வெற்றி இலக்கங்கள் 21 33 46 72 D
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3515
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 05.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,241,303
வெற்றி இலக்கங்கள் 07 35 37 65 R
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் 3,177,668/=
திகதி: 05.02.2021
வெற்றி வாரம்: 3066
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 22 34 43 62 துலாம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,607,360

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1359
சீட்டிழுப்பு திகதி 05/02/2021
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் X 42 57 65 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் 67,128,188/=

R 09 16 19 47
சீட்டிழுப்பு வாரம் 686
பச்சை
05.02.2021
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,903,270
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# வடக்கு மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்க அனைத்து ஏற்பாடுகளும் தயார்

## மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

"வடக்கு மாகாணத்தில் பொது மக்களுக்கு கோவிட் -19 தடுப்பூசி மருந்து வழங்கும் பணிக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. தடுப்பூசி மருந்து கிடைத்ததும் மறுநாளே பொது மக்களுக்கு டோஸ் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படும்"என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மரு த்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு வயது அடிப்படையில் கோவிட் -19 தடுப்பூசி மருந்து வழங்கும் நடவடிக்கையை முன்னெடுக்க சுகாதார அமைச்சினால் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதனால் வடக்கு மாகாணத்தில் பொது மக்களின் வயது அடிப்படையிலான விபரங்கள் பட்டியலை தயாரித்து தயாராக வைத்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கோவிட் -19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த தடுப்பூசி மருந்து வழங்கலுக்கு வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 944 சுகாதாரத் துறை சேவையாளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தப் பணியில் முதல் நாளில் 2 ஆயிரத்து 997 பேர் கோவிட் -19 தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர். இது 30 சதவீதத்தினர் ஆகும்.

இரண்டாம் நாளில் வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 530 சுகாதார சேவையாளர்கள் கோவிட் -19 தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர்.

7ஆம் நாளான நேற்று 217 பேர் கோவிட் -19 தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர். இதுவரை 85 சதவீத சேவையாளர்கள் தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர்.

பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பவதிகள் மற்றும் கர்ப்பம் தரிக்க காத்திருப்போர் என மூன்று வகையினரை இந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

அதனால் அவ்வாறானவர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் கோவிட் -19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள இன்று மேலும் ஒருநாள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம-03,33)

### மாணவர்கள் உட்பட

# சுமார் ஒரு இலட்சம் பேர் போதைவஸ்துக்கு அடிமை

## அஜித் ரோஹண



(கொழும்பு)

இலங்கையில் போதை வஸ்து பாவனைக்கு உள்ளான ஒரு இலட்சம் பேரில் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது சுமார் ஒரு இலட்சம் பேர் போதை வஸ்துக்கு அடிமைகளாகியுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த தொகையில் இளைஞர்களும், பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், போதை வஸ்து பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை பாதுகாக்க பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, கல்வி அமைச்சுடன் இணைந்து திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது என்றும் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பல்வேறு மட்டங்களில் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-03)

# தென்னிலங்கையிலிருந்து யாழிற்கு வந்த நபருக்கு கொரோனா

## யாழில் 4 கடைகள் மூடப்பட்டதுடன் 32 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படும் வங்கி கட்டடத்துக்கு வளிச்சீராக்கி (AC) பொருத்துவதற்கு வருகைதந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நகரில் 4 கடைகள் மூடப்பட்டுள்ளதுடன் 32 பேர் சுயதனிமைபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படும் வங்கி கட்டடத்துக்கு வளிச்சீராக்கி பொருத்துவதற்கு கடந்த மாதம் வருகை தந்த ஒருவருக்கு எழுதுமட்டுவாள் வீதித் தடையில் வைத்து பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டன. அவருக்கு தொற்று உள்ளமை கடந்த புதன்கிழமை உறுதிப்படுத்தபட்டுள்ளது.

அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட நபரை அடையாளம் காண்பதற்காக தகவல் வழங்கப்பட்ட நிலையில் அவர் யாழ்ப்பாணம் நாக விகாரை விடுதியில் தங்கியிருந்தமை கண்டறியப்பட்டது.

அத்துடன், வங்கிக் கட்டட வேலைகள் நிறுத்தப்பட்டதுடன், தொழிலாளிகள் சிலர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர் சென்றதாகத் தெரிவித்த நாக விகாரைக்கு அண்மையில் உள்ள மருந்தகம் மூடப்பட்டு அங்கு பணியாற்றுபவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த நபர் சென்றிருந்தார் என்ற காரணத்தால் யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் உள்ள உணவகம், வைத்தியசாலை வீதியில் உள்ள ஐஸ் கிறீம் கடையுடன் கூடிய உணவகம் உள்ளிட்டவையும் மூடப்பட்டுள்ளன.

இவ்வாறு மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ளவர்கள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்தால் திறக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (ம-03,33)


**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையத்தில் சர்வதேச, அரச அங்கீகார சான்றிதழுடனான ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா விருந்தோம்பல் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை எமது www.cthi.lk இணையத்தளத்தின் ஊடாக அல்லது எமது அலுவலக காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(C-1361)
தொடர்புகளுக்கு :
Ms. Vani - 076 057 9999, 021 314 6171
CANADIAN TOURISM AND HOSPITALITY INSTITUTE
No. 1544, K.K.S Road, Kondavil, Jaffna.

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
> அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org
(5546)
021 222 8093 புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

**EUROPEAN LANGUAGE COLLEGE**
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான
⇨ IELTS Life Skills A1, B1,
⇨ Grammar & Spoken English
⇨ Work / Student Visa விற்கான IELTS வகுப்புக்கள்.
ஆசிரியை - Mrs. N. ஜெகன் (B.A in English)
19, பலாலி வீதி, ஆரியகுளம். 0761378760/ 021 221 7781
23/2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி. 0769370456 / 0212219497 கச்சேரி Fuel Station அண்மையில்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட French International Diploma (DELF A1, A2, B1, B2) வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (C-1360)

**வேலையாள் தேவை**
கிறைண்டிங் மில்லிற்கு வேலை தெரிந்தவர் அல்லது பழக விருப்பமுள்ளவர் உடன் தேவை.
(இருபாலாரும்)
(ஈரஅரசி அரைத்து வறுத்தல்)
(5548)
நெல்லியடி
077 936 1356

**விவசாய நடத்துனர் தேவை**
விவசாயம் கற்ற, அனுபவமுள்ள ஆண் தேவை.
தொடர்புகளுக்கு (C-1359)
077 314 6548, 076 714 8059
+41779246314
(SMS by Viber / WhatsApp)

**வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்**
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.
பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை
(C-1358)
பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 07.02.2021 , தரம் 3 முதலாவது பரீட்சை 14.02.2021
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

**திருமண சேவை**
திருமணக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. வயது வந்தவர்கள், அரச உத்தியோகத்தர்களின் திருமண குறிப்புக்களும் உண்டு.
(5425)
077 512 2931

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1336)
0768226240 DHL

**அண்ணா EXPRESS**
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள் லண்டன் 1000/= 070 3305500 075 3305500
(C-1337)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.